வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 28.01.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 54 | பக்கங்கள் : 16

# சர்வதேச நியதிகளுக்கு அமைவாக பயங்கரவாத தடை சட்டம் திருத்தம்!

## இராஜதந்திர மாநாட்டில் அமைச்சர் பீரிஸ்



கொழும்பு, ஜனவரி 28

சர்வதேச நியதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டுவரும் நோக்கத்துடன் அந்தச் சட்டம் 43 வருடங்களின் பின்னர் திருத்தப்பட்டு வருகிறது என்று வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

15

## சொகுசு வாகனத்தில் அமைச்சர்கள்! மக்கள் மட்டும் சைக்கிளில் செல்வதா?

### இப்படி கேள்வி எழுப்புகிறார் சஜித்

கொழும்பு, ஜன. 28

"சைக்கிளில் வேலைக்குச் செல்லுமாறு அரசாங்கம் மக்களிடம் முன்மொழிகிறது. எனினும், இவ்வாறான பிரேரணைகளை முன்வைப்பவர்கள் வி8 போன்ற சொகுசு வாகனங்களில் செல்கின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கோவிட்

15

## மாகாண சபை தேர்தலில் போட்டியிட விருப்பமில்லை; ஆனால் போட்டியிடுவோம்!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

யாழ்ப்பாணம், ஜன. 28

13ஆவது திருத்தத்தை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. மாகாண சபை தேர்தலில் போட்டியிடவும் எமக்கு விருப்பமில்லை. ஆனால், இம்முறை தேர்தலில் போட்டியிடப் போவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

15

# நாடே இருளில் மூழ்கும் நிலைமை உருவாகும்!

## மின்சார பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 28

"நாளொன்றுக்கு 4 மணிநேர மின் துண்டிப்பை நாட்டு மக்கள் எதிர்கொள்வதை தவிர்ப்பதற்கு தற்போது முதல் கொண்டே நாளொன்றுக்கு ஒன்று அல்லது இரு மணி நேர மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். அவ்வாறு செய்யாவிட்டால் முழு நாடும் இருளில் மூழ்கும் நிலை ஏற்படும்", என இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நீர் மூலமான மின்சார உற்பத்தி தற்போது 25 வீதத்தால் குறைவடைந்துள்ளது. மின்சாரத்தை தொடர்சியாக விநியோகித்து வருவதால் மின் உற்பத்தி நிலையங்களின் அருகிலுள்ள நீர்த்தேக்கங்களில் குறைவடைந்து, நாட்டில் மின்சார விநியோகம் பாரியளவில் தடைபடும் நிலை உள்ளது என்று கூறியுள்ள மின்சார பொறியிலாளர்கள் சங்கம் மேலும் கூறியவை வருமாறு,

"மின்சார உற்பத்தி நிலையங்களின் அருகாமையிலுள்ள நீர்த் தேங்கங்களிலுள்ள நீர்

15

## ஜனவரி 31 முதல் பெப்ரவரி 5 வரை யாழ்ப்பாணத்தில் தடுப்பூசி வாரம்

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஜனவரி 31ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி வரை தடுப்பூசி வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாள்களில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஏற்கனவே சினோபார்ம் கோவிட்-19 தடுப்

15

## இந்திய பிரதமருக்கான ஆவணம் ஆறு கட்சிகளும் இன்று விளக்கம்!

யாழ்ப்பாணம், ஜன. 28

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பி வைத்த ஆவணக் கடிதத்தில் ஒப்பமிட்ட ஆறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் இணைந்து இன்று வெள்ளிக்கிழமை செய்தியாளர் சந்திப்பை நடத்தவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில், இன்று வெள்ளிக்கிழமை

15

## சட்ட திருத்தத்தால் மட்டும் மீனவர்கள் பிரச்னை தீராது!

### சுட்டிக்காட்டுகிறார் நீதி அமைச்சர்



கொழும்பு, ஜன. 28

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி செயற்பாடுகள் தொடர்பில் சட்ட திருத்தங்களை மாத்திரம் மேற்கொண்டு பிரச்னைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க முடியாது. இந்தியா எமது நட்பு நாடு என்ற ரீதியில் இரு தரப்பு இராஜதந்திர உறவு களையும் கவனத்தில் கொள்ளவேண்டிய கட்டாயம் உள்ளது என நீதி அமைச் சர் அலி சப்ரி தெரிவித்தார்.

15

## இனிமேல் தேர்தலில் போட்டியிடமாட்டேன்

### அத்துரலிய ரத்ன தேரர் அறிவிப்பு



கொழும்பு, ஜன. 28

"இனிவரும் தேர்தல்களில் நான் போட்டியிட போவதில்லை." என்று பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்தார்.

"இனி தேர்தல் அரசியலில் ஈடுபடும் எண்ணம் எனக்கு இல்லை. மாறாக மக்களை வழி நடத்துவேன். பலமான மக்கள் அமைப்பு கட்டியெழுப்படும்."- எனவும் அவர் கூறினார்.

15

## சர்வதேசத்தையும் எங்களையும் ஏமாற்றவே வடக்கில் நீதி அமைச்சின் நடமாடும் சேவை!

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் விசனம்

யாழ்ப்பாணம், ஜன. 28

பெப்ரவரி இறுதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் சர்வதேசத்தையும் எங்களையும் ஏமாற்றுவதற்காக வடக்கில் நீதி அமைச்சின் நடமாடும் சேவை இடம்பெறுகின்றது. இதில் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான நடவடிக்கையில் யாரும் பங்கேற்கவேண்டாமென யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் இதனை தெரிவித்தனர்.

15

## பெப். 1 வரை மின்வெட்டு இருக்காது

கொழும்பு, ஜன.28

எதிர்வரும் முதலாம் திகதி வரை மின்வெட்டு இருக்காது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத் நாயக்க

15

## மன்னாரில் மீண்டும் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை உயர்வு

மன்னார், ஜன. 28

மன்னார் மாவட்டத்தில் சடுதியாக குறைவடைந்து வந்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து காணப்படுகிறது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.விநோதன் விடுத்துள்ள நாளாந்த கொரோனா தொற்று நிலைவர அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்- மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

அது இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலம். இந்த ஊர்க்குருவி 'ஈழநாடு'இல் எழுதிய சிறிய குறிப்பு ஒன்று இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

ஒரு தென்னை மரம், ஒருவரின் வீட்டு வேலியோடு நின்றது.

ஒருநாள் அந்த தென்னையிலிருந்து விழுந்த தேங்காய் ஒன்று அடுத்தவீட்டு வளவுக்குள் விழுந்துவிட்டது.

தென்னம்பிள்ளைக்கு சொந்தக்காரரான அவர், தென்னைக்கு கீழே நின்று மேலே பார்ப்பார், பிறகு கீழே பார்ப்பார், பிறகு சொல்லுவார்,

"தென்னை என்ர வளவுக்குள்ளதானே நிற்குது, பிறகு எப்பிடி தேங்காய் அடுத்தவீட்டு வளவுக்குள்ள விழுந்தது? இது என்னவோ 'றோ'வின்ர சதியாகத்தான் இருக்க வேணும்?" என்று.

அந்தக் கலத்தில் இப்படித்தான் யாழ்ப்பாணத்தில் எல்லாவற்றையும் பார்த்தார்கள் என்பதை நகைச்சுவையோடு ஊர்க்குருவியர் அப்போது பதிவுசெய்திருந்தார்.

இப்போதும் சில விடயங்களுக்கு நம்மவர்கள் இப்படித்தான் கிளி சோதிடம் பார்த்துக் கதை செல்லிக்கொண்டிருக்கின்றனர் என்பது அந்தச் செய்தியை அறிந்தபோது நினைக்கத்தோன்றியது.

தெற்கிலுள்ள ஒரு தீவிர அரசியல்செயற்பாட்டாளர் அவர்.

அவரிடம் தெற்கில் நிலைமை எப்படி என்று கேட்டேன்.

'இப்போது ராஜபக்ஷக்களை எதிர்த்து யார் தேர்தலில் நின்றாலும் அவர் வெற்றிபெறுவார் என்கிறார்களே அது உண்மையா?' என்று கேட்டேன். அவரும் ஒரு எதிரணி முக்கியஸ்தர். அவர் சொன்னார்,

"நாட்டின் பொருளாதாரம் தலைகீழாகியிருக்கின்றது. விவசாயிகள் உரம் இல்லாததால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். மின்சாரம் எந்த நேரமும் தடைப்படலாம் என்ற நிலை. விலைவாசி பலமடங்கு அதிகரித்துவிட்டது. அத்தியாவசிய பொருட்கள் வேறு, இல்லை... இப்படி பல பிரச்னைகள் இருந்தாலும், உங்கட ஆக்கள் அதையெல்லாம் மறக்கப்பண்ணி விடுகின்றார்களே" என்றார்.

எனக்கு இவர் எதனைச் சொல்ல வருகிறார் என்பது புரியவில்லை.

அவரே சொன்னார்,

"கோட்டாபய அரசியலில் இறங்குவது என்று முடிவு செய்ததுமே, அவர் பல்வேறு அமைப்புக்களை உருவாக்கினார். அவற்றில் ஒன்று. நாட்டிலுள்ள விகாரைகளை எல்லாம் ஒன்றிணைத்து ஒரு 'நெற்வேர்க்'கை உருவாக்கியது. அந்த நெற்வேர்க் மிக பெரியது மாத்திரமல்ல, விகாரைகளை இணைத்திருந்ததால் சர்வ சாதாரணமானவர்கள் அனைவரையும் இணைத்திருந்தது. கிராமத்தவனுக்கு என்ன இல்லையென்றாலும் பொறுத்துக்கொள்ளுவான். ஆனால் நாடு பறிபோகப்போகின்றது என்றால் அதனை அப்படியே நம்பிவிடுவான். பொறுக்கமாட்டான். அதனை நன்கு அறிந்து வைத்திருக்கின்ற இந்த நெற்வேர்க்காரர்கள் கிராமம் கிராமமாக இந்திய அச்சுறுத்தல் குறித்து விளக்கமளிக்கத் தொடங்கிவிட்டனர். இதற்கு உதவும் வகையில்தானே உங்கட ஆக்கள் இந்தியாவுக்கு கடிதம் எழுதுகிறதும் இன்னும் சிலர் அதுகூட போதாது, சர்வதேசம் தலையிட்டு கூட்டாட்சி ஏற்படுத்தவேணும் எண்டு கேக்கிறதும் இவர்களுக்கு மிக வசதியாக பிரச்சாரம் செய்ய உதவுகின்றதே" என்றார்.

இவர்கள் இப்படி பிரச்சாரம் செய்வார்கள் என்பதற்காக நாங்கள் எங்கள் கோரிக்கைகளை கைவிடவேண்டும் என்கிறீரா? என்று அவரிடமே கேட்டேன்.

அதற்கு அவர் சொன்னார்,

"அப்படி சொல்லவில்லை. ஆனால் இந்த நேரத்தில் இப்படிக் கேட்பது, அவர்களுக்கு இன்னமும் வசதியாகி விட்டது. அவர்கள் பதின்மூன்றையும் இல்லாமல் புதிய அரசியலமைப்பை தாக்கல் செய்வார்கள். அது நிறைவேற்றப்படுகின்றதோ இல்லையோ, அதனையே அவர்கள் அடுத்த தேர்தல் பிரச்சாரத்திற்கு கையில் எடுப்பார்கள். நாங்கள் மீண்டும் ஆட்சியில் அமர்ந்தால்தான் இதனை நடைமுறைப் படுத்தலாம் என்பார்கள்" என்றார்.

"எங்கள் கட்சிகள் எல்லாமே தத்தமது யோசனைகளை அரசியலமைப்பு தொடர்பாக ஆராயும் குழு முன் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதனை புறந்தள்ளித்தான் புதிய அரசியலமைப்புக்கான யோசனைகள் வரும் என்பதும் தெரிந்ததுதான். ஆனால், ஏற்கனவே இருந்த அதிகாரத்தையும் அவர்கள் இல்லாமல் செய்தால், எங்களுடைய கோரிக்கையின் நியாயத்தை உலகமாவது அறிந்துகொள்ளட்டுமே" என்றேன்.

"நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். அது உங்கள் மக்கள் நன்மைக்காக நடக்கவேண்டும். ஆனால், இவர்களின் வெற்றியை இலக்காகக்கொண்டுதான் உங்கள் அரசியல் தலைவர்கள் நடந்துகொள்வதாக அல்லவா இங்குள்ள பெரும்பாலானவர்கள் நம்புகிறார்கள்' என்றார் அவர்.

அப்பொதுதான் இந்த தேங்காய் விழுந்த கதை ஞாபகத்திற்கு வந்தது.

**- ஊர்க்குருவி**

# இராணுவத்தினரை தமிழ் மக்களுடன் இணைத்து செயல்பட வைப்பதற்கு இந்த அரசு விரும்புகிறது!

*விக்னேஸ்வரன் எம்.பி. கூறுகிறார்*

**யாழ்ப்பாணம், ஜன. 28**

**இராணுவத்தினரை தமிழ் மக்களுடன் இணைத்து பலவித செயல்பாடுகளில் ஈடுபட வைப்பதற்கு இந்த அரசு விரும்புகின்றது என முன்னாள் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பிருமான க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

சங்கானை பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் சமூக மட்ட அமைப்புகளுக்கு உதவிகள் வழங்கிய பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களையும் இராணுவத்தையும் இணைத்து செயல்பட வைப்பதற்கு மற்றையவர்களது நிலைப்பாடு என்னவோ எனக்கு தெரியாது. ஆனால் நான் அதற்கு எதிரானவன். மக்களுடைய காணிகளை நாங்களே எடுத்து அதனை மக்களுக்கு பயன் தரக்கூடியவாறு மாற்றியமைக்கவேண்டும். மாறாக இராணுவத்தினரிடம் மக்களது காணிகளை வழங்கமுடியாது.

பிரதேச செயலர்கள் தமது பிரிவிற்குட்பட்ட காணிகளை ஏதோ ஒரு உபாயத்தின் மூலமாக அதன் உரிமையாளர்களை அடையாளங்கண்டு குத்தகைக்கு எடுத்து அதனை மக்களது தேவைக்காக பயன்படுத்தலாம்.

இங்கிருக்கின்ற மக்கள் தங்களுடைய காணிகளை தாங்களே பயன்படுத்தி அதன் மூலமாக வருமானத்தை எடுக்க வழியமைக்கவேண்டும். இந்த சிந்தனையை தங்களிடம் சேர்ப்பிக்க விரும்புகின்றேன்.

வருங்காலம் மிக மோசமாக அமையக்கூடிய சூழ்நிலையை நாம் எமது கண்களுாடாக தற்போது காண்கிறோம். எனவே வருங்காலத்தில் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை

சிந்தித்து அந்த சிந்தனையின் அடிப்படையிலேயே முடிவெடுக்கவேண்டும்-என்றார். (அ)

## ஹெரோயினுடன் மூவர் சிக்கினர்!

கொழும்பு, ஜன. 28

வெவ்வேறு இடங்களில் ஹெரோயினுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்தது.

இதற்கமைவாக களுத்துறை, பாணந்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அஜ்மிர் மாவத்தையில், 21 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வாழைத்தோட்டத்தைச் சேர்ந்த 27 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெவொல்மடுவத்த பிரதேசத்தில் 7 கிராம் 240 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட படோவிட்ட பிரதேசத்தில் 6 கிராம் 190 மில்லிகிராம் ஹெரோயினுடன் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கல்கிஸை பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயது நபரே கைது செய்யப்பட்டார். (அ)

## காதலை முறித்த மாணவியை கத்தியால் குத்திய இளைஞர்!

கொழும்பு, ஜன. 28

லபுதுவ உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் மாணவி ஒருவரைக் கத்தியால் குத்திப் படுகாயப்படுத்திய சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனமல்வில பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரால் மாணவியைக் காயப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட கத்தி மற்றும் மாணவியின் கையடக்கத் தொலைபேசி ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

காதல் தொடர்பை முறித்துக் கொண்டதன் காரணமாக மாணவி மீது இளைஞர் கத்தியால் குத்தியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தனமல்வில பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த மாணவி சம்பவதினம் இடம்பெற்ற பரீட்சைக்கு லபுதுவ தொழில்நுட்ப நிறுவனத்துக்கு வந்த சந்தர்ப்பத்தில் சந்தேகநபரால் இவ்வாறு கத்தியால் குத்தப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த மாணவி காலி கராப்பிட்டிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கைதான சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் காலி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அக்மீமன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## ஒமைக்ரோனை எதிர்கொள்ள சுகாதாரக் கட்டமைப்பு தயார்

கொழும்பு, ஜன. 28

ஒமிக்ரோன் பிறழ்வை எதிர்நோக்கும் வகையில் நாட்டின் வைத்தியசாலை கட்டமைப்பு தயாராகவிருப்பதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் வீட்டிலேயே சிகிச்சை வழங்கும் நடைமுறைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# பயங்கரவாதச்சட்ட விதிமுறைக்கு எதிரான மனு; தொடர் விசாரணைக்கு உயர்நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, ஜன. 28

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிமுறைகளை எதிர்த்து, மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து தாக்கல் செய்த மனுவை தொடர்ந்தும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதி மன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், வழக்கு முடியும் வரை விதிமுறைகளை செயல்படுத்த தடை விதித்து இடைக்கால உத்தரவையும் நீதிமன்றம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, யசந்த கோதாகொட மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப் பட்டது.

2021 மார்ச் 12ஆம் திகதியன்று சிறப்பு வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட வன்முறையான தீவிரவாத மதக் கருத்தியலில் இருந்து தீவிரமயமாக்கல் என்ற விதிமுறைகளுக்கு எதிராகவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த விதிமுறைகள், பொது மக்களின், அரசியலமைப்பு ரீதியில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் பலவற்றை மீறுவதாக மனுதாரர்கள் குறிப்பிட்டனர்.

விசாரணை எதிர்வரும் மார்ச் 21ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
28.01.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், தை 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இந்திய எதிர்ப்பு?

தமிழ் அரசியலில் இந்திய எதிர்ப்பை வெளியிடும் ஒரு தரப்பினர் இருக்கின்றனர். வெளித்தோற்றத்தில் தங்களை அவ்வாறு காண்பித்துக் கொள்ளாவிட்டாலும்கூட, சந்தர்ப்பம் கிடைக்கும்போது தங்கள் கோஷங்களை முன்வைப்பதுண்டு. தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஆறு கட்சிகள் ஒன்றிணைந்து, இந்தியாவின் உதவியை நாடியதை அடிப்படையாகக் கொண்டு மீளவும் தமிழ் சூழலில் இந்திய எதிர்ப்பு கோஷங்களை சிலர் முன்வைக்க முயற்சிக்கின்றனர்.

குறிப்பாக இந்த கட்சிகளை இந்திய முகவர்களென்றும் இந்தியாவின் அடிமைகளென்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் விமர்சித்து வருகின்றனர். சீனாவின் பிடியிலிருந்து இலங்கையை இந்தியாவின் காலடியில் விழுத்துவதற்காக தமிழர் அரசியல் பலியிடப்படுவதாகவும், முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் குறிப்பிட்டிருக்கின்றார். அவ்வாறாயின் இந்தியாவின் செல்வாக்கு இலங்கைத் தீவில் அதிகரிப்பதை முன்னணியினர் விரும்பவில்லையா என்னும் கேள்வி எழுகின்றது?

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் வெளிப்படையாக பேசும் ஒரேயொரு நாடு இந்தியா மட்டும்தான். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மனித உரிமைகளை மேம்படுத்துதல் என்னும் அடிப்படையில் மட்டுமே பேசிவருகின்றன. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அவர்கள் வெளிப்படையாகப் பேசுவதில்லை. அதேவேளை தமிழர்களுக்கு முழுமையாக ஆதரவாக இருக்கின்ற ஒரேயொரு வெளிநாட்டு தரப்பு என்றால் அது தமிழ்நாட்டு தமிழர்கள் மட்டும்தான். இந்தியா தொடர்ந்தும் ஈழத் தமிழர்கள் தொடர்பில் கரிசனை கொண்டிருப்பதற்கு தமிழ்நாடே பிரதான காரணமாகும். இவ்வாறானதொரு சூழலில், இந்திய எதிர்ப்பை ஈழத் தமிழர்கள் மத்தியில் பரப்புவது, புத்திசாலித்தனமான ஒன்றா என்னும் கேள்வியை மக்கள் தங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டும். 13ஐ எதிர்ப்பதாக கூறுபவர்கள், தாங்கள் இந்தியாவை எதிர்க்கவில்லை - 13ஐ மட்டும்தான் எதிர்க்கின்றோமென்று வாதிடலாம். ஆனால், அது தர்க்க ரீதியில் பலமான வாதமல்ல. உண்மையிலேயே அதுதான் - அவர்களின் நிலைப்பாடு என்றால், அதனை அவர்கள் நாகரிகமாக முன்வைக்கலாம். இந்திய முகவர்கள் - இந்தியாவின் அடிமைகள் என்று கூறி இந்திய விரோதத்தை வளர்க்க வேண்டியதில்லை.

13இன் போதாமைகள் தொடர்பில் நிச்சயம் பேசத்தான் வேண்டும். ஒற்றையாட்சிக் கட்டமைப்பின் கீழ் அதிகாரங்கள் பகிரப்படுவதிலுள்ள சிக்கல்கள் தொடர்பில் நிச்சயம் பேசத்தான் வேண்டும். சமஷ்டித் தீர்வு ஒன்றின் மூலம்தான், தமிழ் மக்களின் உச்சபட்சமான அரசியல் அபிலாசைகளை தீர்க்க முடியுமென்பதைப் பற்றி பேசத்தான் வேண்டும். 1949இல் தமிழ் அரசு கட்சி (சமஷ்டிக் கட்சி) உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இதனைத்தான் தமிழ் தலைமைகள் கோரிவருகின்றன. இடையில் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும்தான் தனிநாட்டுக்கான போராட்டம் இடம்பெற்றது. தனிநாட்டை இந்தியா மட்டுமல்ல உலகில் எந்தவொரு நாடும் ஏற்றுக்கொள்ளவில்லை. நாடுகளின் ஆதரவிருந்திருந்தால் அதனை தமிழர்கள் நிச்சயம் அடைந்திருக்க முடியும்.

இப்போது நிலைமைகள் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டது. தமிழர்கள் முற்றிலும் வெளியாரின் தயவை மட்டுமே எதிர்பார்த்திருக்கின்ற காலம் இது. தெற்காசியாவை பொறுத்தவரையில் எந்தவொரு வெளித் தலையீடும் இந்தியாவைப் புறம்தள்ளி நிகழமுடியாது. இதனை கடந்த கால வரலாறு, நமக்கு தெளிவாக உணர்த்தியிருக்கின்றது. நிலைமைகள் இவ்வாறிருக்கின்றபோது, வீதிகளில் நின்று இந்தியாவிற்கு எதிராக கோஷம் எழுப்புவதால் தமிழினம் எதனை அடையப் போகின்றது? இவ்வாறு எதிர்ப்பு அரசியல் செய்பவர்கள் எதனை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப் போகின்றனர்? இதுவரை இவர்கள் பெற்றுக் கொடுத்தது என்ன? எல்லோரையும் எதிர்த்துக் கொண்டு, இந்தச் சிறுதீவில், தமிழினம் எவ்வாறு வாழப் போகின்றது?

எதிரிகளை அதிகரித்துக் கொண்டிருப்பதன் மூலம் - ஓர் இனம் உருப்பட்டதாக வரலாற்றில் பதிவுகள் இல்லை. தமிழர்கள் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும். தமிழ் சமூகத்தின் முன்னேறிய பிரிவினர் இது தொடர்பில் சாதாரண மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

# கண்ணீரில் கரையும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அவலம்!

**அலசுவது இராஜதந்திரி**

இலங்கையின் வடக்கு - கிழக்கில் யுத்தம் முடிவடைந்தும் விடை காணப்படாத ஒரு மனிதாபிமானப் பிரச்னையாக காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரம் விளங்குகின்றது.

எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து இன்று வரை வடக்கு - கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தம்மவரை தேடி அலைந்த வண்ணமாக இருக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவியேற்றபோது இலங்கையில் மாகாணங்கள் தோறும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள விசேட ஆணைக்குழுக்களை அமைத்திருந்தார். இந்த ஆணைக்குழுக்களும் தமது விசாரணைகளை பூர்த்தி செய்து தமது அறிக்கைகளை அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கையளித்திருந்தனர்.

இந்த விசாரணை அறிக்கைகள் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தாம் தேடித் திரியும் உறவினர்கள் எவ்வாறு தம்மிடமிருந்து பிரித்துச்செல்லப்பட்டார்கள் என்ற வாய்மூல தகவல்களை ஆணைக்குழுக்களிடம் வழங்கியிருந்தமையை உள்ளடக்கியிருந்தது.

இதன் மூலம் ஆயுதப்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு காணாமலாக்கப்பட்டோர், மற்றும் ஆயுதப்போராட்ட இயக்கங்கள், அரசோடு இணைந்து இயங்கிய ஆயுதப்போராட்ட அமைப்புகள் என்பவற்றால் காணாமலாக்கப்பட்டோர் பற்றிய தகவல்கள் முதல் தடவையாக வெளிச்சத்துக்கு வந்திருந்தன.

இருந்தபோதிலும் காணாமல் ஆக்கப்பட்டோர் காணாமல் போனோராகவே இருந்து வருவதோடு இதுவரை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்காமலே இருந்து வருகின்றது.

நேற்று முன்தினம் வவுனியாவில் நீதி அமைச்சின் நடமாடும் சேவை இடம்பெற்றபோது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆர்ப்பாட்டமொன்றை ஆக்ரோஷமாக நடத்தியிருந்தனர். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நேர்ந்த கதி என்னவென்று கோரியே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது.

வடக்கு - கிழக்கு யுத்தம் எண்பதுகளின் ஆரம்பத்தில் மூர்க்கமடைந்தபோது ஆயுத போராட்ட அமைப்புகளுக்கிடையிலான மோதல்கள் மற்றும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளும் விரிவடைந்திருந்தன. இதன் போது கூட ஏராளமானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

இதுதவிர, ஆயுதப்புடையினர் மற்றும் ஆயுதப்படையினரோடு இணைந்து இயங்கிய ஆயுதப் போராட்ட அமைப்புகள் என்பவற்றால் விசாரணகளுக்காக அழைத்துச்செல்லப்பட்டு இதுவரை காணாமல் போயிருப்போரின் எண்ணிக்கையே ஏராளமானதாக இருக்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அரசாங்கம் உத்தேசித்திருப்பது போல காணாமல் போனோருக்கான மரண சான்றிழதழ்களை வழங்குவதோடு அவர்களுக்கான நட்டஈடுகளை வழங்கும் நடவடிக்கையையும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வன்மையாக கண்டித்திருந்தனர்.

அத்துடன், தமக்கு மரண சான்றிதழ்களும் வேண்டாம். நட்டஈடுகளும் வேண்டாமெனவும். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளே மீளவும் வேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தனர்.

நீதி அமைச்சர் அலி சப்ரி வடக்கே நடமாடும் நீதிச்சேவையை முன்னெடுக்க முன்வந்துள்ளார். இதன் மூலம் வடக்கே நீதிச் சேவையை பெறுவது பற்றிய ஆலோசனைகள் மற்றும் சட்ட திட்டங்களுக்கான அணுகுமுறைகள் பற்றி விளக்கமளிப்பதே முக்கிய நோக்கமாகும்.

வடக்கு - கிழக்கை பொறுத்த வரை சட்டம் - ஒழுங்கு, நீதிச்சேவை என்பவை “புனர் ஜன்மம்“ எடுத்தது போன்ற நிலைமையே காணப்படுகின்றது. எண்பதுகளின் ஆரம்பத்தில் வடக்கு - கிழக்கில் பொலிஸார்மீதான தாக்குதல்களுடனும், பொலிஸ் நிலையங்கள் மட்டுமல்ல. நீதிமன்றங்களும் தகர்க்கப்பட்ட நிலையே காணப்பட்டிருந்தது. நீதிபதிகள் பலர் கூட ஆயுதகுழுக்களால் கொல்லப்பட்டிருந்தனர். அரச அதிபர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.


இத்தகைய பின்னணியில் நிர்வாக சேவை, மற்றும் நீதிச்சேவை ஆகியவை மீளவும் கட்டியெழுப்பப்படவேண்டிய தேவை வடக்கு - கிழக்கில் வெகுவாக உணரப்பட்ட நிலையிலேயே அம்மாகாணங்களில் மீளவும் நீதிச் சேவைமீதான நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சியில் நீதியமைச்சின் நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இருந்தபோதிலும் இந்த முயற்சியின் ஆரம்பம் பாதிக்கப்பட்டோருக்கு உரிய நீதி நியாயத்தை வழங்காத பட்சத்தில் வடக்கு - கிழக்கு மக்களின் நம்பிக்கையை நீதிச்சேவை குறித்து பெறுவது கடினமாகவே இருக்கும். இதன் வெளிப்பாடாகவே நேற்று முன்தினம் வவுனியாவில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் தமக்கு நீதி வேண்டி ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் மட்டுமல்ல. கணிசமானளவு தமிழ் அரசியல் கைதிகளும் பல வருட காலமாக நீதி விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே, அடிப்படை மனிதாபிமானப் பிரச்னைகளான காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் போன்றவற்றுக்கு நியாயமான தீர்வுகள் கிடைக்காதவரை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று முன்தினம் குறிப்பிட்டது போல பாதிக்கப்பட்டோர் சர்வதேச விசாரணையைக்கோருவது தவிர்க்கப்பட முடியாததாகவே இருக்குமெனக் கருதலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜனவரி - 28 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம் - தை 15
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : ஏகாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
பேச்சிலும் செயலிலும் கவனமாயிருந்தால் இனிய நாள். எதிர்பாராத பணவரவு உண்டு. நல்ல செய்திகள் தேடி வரும். மின்சார சாதனங்களை கையாளும்பொழுது கவனம் தேவை.

**இடபம்**
வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். அதிர்ஷ்ட நாள். வாகனப் பயணங்களில் நிதானம் அவசியம். உங்களின் புகழ் கூடும். ஆசை நிறைவேறும். லாபம் கூடும். குடும்பம் மகிழும்.

**மிதுனம்**
மூத்த சகோதரர், சகோதரியின் உதவி கிடைக்கும். நீங்கள் செய்யும் செயல்கள் சிறப்படைந்து நற்பலன் தரும். அலுவலக நண்பர்களால் ஏற்பட்ட கஷ்டம் நீங்கும்.

**கடகம்**
எதிர்பாராத சுபச்செலவு வரும். நண்பர்களால் நன்மை உண்டாகும். பணியில் கவனமாக இருக்கவும். பாவச்செயல்களைத் தவிர்க்கவும். பேச்சுவார்த்தைகள் வெற்றியைத் தரும். பழிக்கு அஞ்சுங்கள்.

**சிம்மம்**
பதவி உயர்வு கிடைக்கும். பணிவாகச் செயல்பட்டு வெல்வீர்கள். எதிர்பாராத பண வரவு வந்து உங்களை திக்குமுக்காட வைக்கும். அதிர்ஷ்டமான நாள். வெளியூர் பயணங்கள் உண்டாகும்.

**கன்னி**
வெளிநாட்டுத் தொழில் தொடர்புகள் நல்ல லாபத்தை தரும். நிதி செயல்பாட்டிலும், பணம் கையாளும் போதும் கவனம் தேவை. உடலில் இருந்த அசதி நீங்கும். பெரியோரின் துணை உண்டு.

**துலாம்**
உங்களின் செல்வாக்கு கூடும். குடும்பத்தை கவனிப்பீர்கள். பணியாளர்கள் பேச்சில் கவனமாக இருக்கவும். சேமிப்பில் ஆர்வம் கூடும். வார்த்தைகளால் யாருக்கும் காயம் உண்டாக்க வேண்டாம்.

**விருட்சிகம்**
பணியாளர்கள் மன திடத்துடன் தடைகளை எதிர்கொள்வீர்கள். சுபச்செலவுகள் வரும். எதிர்பாராத பண வரவு உண்டு பொறுமையுடன் காத்திருந்த விஷயம் இன்று நல்லபடியாக முடியும்.

**தனுசு**
புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். சோம்பல் வேண்டாம். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கவும். செயலில் கவனம் தேவை. அதிக உழைப்பினால் பணி, தொழில் சிறப்படையும்.

**மகரம்**
முயற்சியை கூட்டுவதால் உங்களது செயல்கள் சிறப்படையும். குடும்ப நல்லுறவு நீடிக்கும். பெண்களுக்கு பாராட்டு கிடைக்கும். ஆன்மிகத் திருத்தலத்துக்கு செல்வீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கும்பம்**
தந்தைக்கும், குழந்தைகளுக்கும் மிகுந்த நன்மை ஏற்படும். கற்பனை குழப்பத்தை தவிர்க்கவும். குடும்பம் சிறப்படையும். பகை கொண்ட உறவினர்கள் உங்களால் இணைவர்.

**மீனம்**
எதிர்பாலினத்தினரால் தொல்லைகள் ஏற்படக்கூடும். மற்றவர் பொருளைக் கையாள்கையில் கவனம் தேவை. வாழ்க்கைக்கு உதவக்கூடிய புதிய விஷயங்களை கற்பீர்கள்.

# தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல்: களமிறங்கிய பறக்கும் படைகள்!



சென்னை, ஜன. 28

தமிழகத்தில் பெப்ரவரி 19ஆம் திகதி நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தல் களம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. சென்னையில் கண்காணிப்பு பணியில் ஈடுபட 45 தனிப்படைகளை அமைத்துள்ளது தேர்தல் ஆணையம்.

நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலுக்கான அறிவிப்பு நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. உச்ச நீதிமன்ற உத்தரவுப் படி ஜனவரி 27ஆம் தேதிக்குள் அறிவிப்பு வெளியாக வேண்டும் என்ற சூழலில் மாநில தேர்தல் ஆணையர் பழனிகுமார் உள்ளாட்சித் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த சூழலில், சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பு பணியில் ஈடுபட 45 பறக்கும் படைகளைத் தேர்தல் ஆணையம் அமைத்துள்ளது. மேலும், தேர்தல் நடத்தும் அலுவலர்களாக 37 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பணம், பொருட்களைப் பறிமுதல் செய்யும் போது காணொலி எடுத்து உடனுக்குடன் அனுப்பி வைக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. வியாபாரிகளிடமிருந்து பணம் பறிமுதல் செய்தால் உரிய ஆவணம் சமர்ப்பித்த பிறகு திருப்பி தரப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

அதுபோன்று சென்னையில் பொது இடங்களில் உள்ள அரசியல் கட்சிகளின் சுவர் விளம்பரங்களை அகற்ற அனைத்து வார்ட் உதவி மற்றும் இளநிலை பொறியாளர்களுக்கு சென்னை மாநகராட்சி உத்தரவிட்டுள்ளது.

# வடமாநிலங்களில் மும்மொழி திட்டம் பின்பற்றப்படவில்லை

## ஆளுநர் கருத்துக்கு பழ.நெடுமாறன் எதிர்ப்பு



சென்னை, ஜன. 28

இந்தி மொழியை தமிழக மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தமிழக ஆளுநர், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பேசியுள்ளதற்கு தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், “இந்தியாவின் பிற மாநில மாணவர்கள் தங்கள் தாய்மொழியைத் தவிர, பிற மாநில மொழிகளைக் கற்கிறார்கள், அதைபோல தமிழக மாணவர்கள் இந்தி உள்பட பிற மாநில மொழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தமிழக ஆளுநர் கூறியுள்ளார்.

இந்தியாவின் தலைமை அமைச்சராக லால்பகதூர் சாஸ்திரி இருந்தபோது, இந்தி, ஆங்கிலம், மாநிலங்களின் தாய்மொழி ஆகிய மூன்று மொழிகளை அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களும் கற்கவேண்டும் என சட்டம் கொண்டுவந்தார்.

அதாவது, வட இந்திய மாணவர்கள் இந்தி, ஆங்கிலம் ஆகியவற்றுடன் தென்னிந்திய மொழிகளில் ஏதாவது ஒன்றை கற்றுக்கொள்ளவேண்டும். தமிழக மாணவர்களும் தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றுடன் மூன்றாவது மொழியாக இந்தியைக் கற்கவேண்டும் என்றும் கூறினார்.

ஆனால், இதுவரை வட இந்திய மாநிலங்களில் எந்தவொரு மாநிலத்திலும் மும்மொழித் திட்டம் பின்பற்றப்படவில்லை. தமிழ் உள்பட தென்னிந்திய மொழிகளில் ஒரு மொழியைக் கூட வடஇந்திய மாணவர்கள் கற்க இதுவரை ஏற்பாடு செய்யப்படவில்லை“ எனத் தெரிவித்துள்ளார்.

# சமூக நீதிக்கான போராட்டத்தில் தி.மு.க. எதனையும் செய்யவில்லை

## தமிழக பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் திருப்பதி



சென்னை, ஜன. 28

“சமூக நீதிக்கான போராட்டத்தில் திமுக ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை“ என்று தமிழக பாஜகவின் செய்தி தொடர்பாளர் தி.நாராயணன் திருப்பதி கூறியுள்ளார். “பாஜக உருவாக்கி தந்து, நிலைநாட்டிய சமூக நீதிக்கு எந்த சோதனையையும், குழப்பத்தையும் ஏற்படுத்தாமல் இருந்தால், அதுவே திமுகவின் சாதனைதான் என்பதை திமுக தலைவர் உணர்ந்து கொள்ள வேண்டும்“ என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“சமூக நீதி வரலாற்றில் சாதனை படைக்கப்பட்டுள்ளது. இது சாதரணமாக கிடைத்து விடவில்லை. மக்கள் மன்றத்திலும், பாராளுமன்றத்திலும் சட்டசபையிலும், நீதிமன்றத்திலும் நடத்திய போராட்டங்களின் வழியே இந்த சாதனை பெற்றிருக்கிறோம் என்று கூறியிருக்கிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின். ஆம், சரிதான், மக்கள் மன்றத்தில் அளித்த தீர்ப்பினால் அடல் பிகாரி வாஜ்பாய், அத்வானி அமைச்சர்களாக இருந்த எங்கள் ஜனதா கட்சியின் ஆட்சியில் தான் மண்டல் ஆணையம் நியமிக்கப்பட்டது. 1989 தேர்தலில் “நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மண்டல் ஆணைய பரிந்துரையை அமல்படுத்துவோம்” என்ற தேர்தல் வாக்குறுதியை அளித்த ஒரே கட்சி பாரதிய ஜனதா கட்சிதான். அரசியல் அதிகாரத்திற்காக சமூக நீதியை பத்து வருடங்கள் குழி தோண்டி புதைத்தது திமுக -காங்கிரஸ்கூட்டணி என்பதே உண்மை” எனத் தெரிவித்துள்ளார்.

# வேகமெடுக்கிறது கொரோனா!

## நாட்டை முடக்காமல் பரவலை கட்டுப்படுத்துவதற்கு அரசு முயற்சி



**கொழும்பு, ஜன. 28**

**"நாட்டை முடக்காமல் வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்ததே முயற்சிக்கின்றோம். இதற்கு பொது மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்."என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

கொரோனா சிகிச்சை நிலையங்களில் 6 ஆயிரத்து 25 கட்டில்கள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன. எதிர்காலத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் அதனை சமாளிக்கக்கூடிய வளம் உள்ளது. பழைய நடைமுறை பின்பற்றப்படும். அத்துடன், வைத்தியசாலைகளில் போதுமானளவு 'ஒட்சிசன்' உள்ளது. எனவே, வைத்தியசாலைகளில் இடப்பற்றாக்குறை மற்றும் ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என வெளியாகும் தகவல்கள போலியானவை.

நாட்டை மீண்டும் முடக்குவதை நினைத்தும் பார்க்கமுடியாது. அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் இருக்க பொது மக்கள் சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்த பொறுப்புடன் செயற்பட வேண்டும். ஏற்கனவே நாடு முடக்கப்பட்டதால் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கங்கள் இன்னும் எதிரொலித்துக்கொண்டுதான் இருக்கின்றன-என்றார். (அ)

### சபை அமர்வு ஒத்திவைக்கப்படாது

கொழும்பு, ஜன. 28

பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படாது என சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக, ஆளும் மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோவிட் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

இதனால் பாராளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகின. இந்நிலையிலேயே அந்த தகவலைச் சபாநாயகர் நிராகரித்துள்ளார். ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தொற்று உறுதியாகியுள்ளபோதிலும், அது பாரதூரமான நிலைமையல்ல எனவும் இதனால் பாராளுமன்ற நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படாது எனவும் சபாநாயகர் தெரிவித்தார்.

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மூன்று கோவிட் தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறான பின்னணியில் பத்து முதல் பதினைந்து உறுப்பினர்கள் நோய்த் தொற்றுக்கு இலக்காகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## பாண்டியன்குளம் பகுதியில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

### மற்றொருவர் காயம்




முல்லைத்தீவு, ஜன. 28

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பகுதியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியானதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

மோட்டார் சைக்கிள் நெல் வெட்டும் இயந்திரம் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தில் மோதி குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த ரவீந்திர நிக்கசீல என்பவர் சம்பவ இடத்திலேயே பலியானதுடன் செல்வபுரம், பாண்டியன்குளம் பகுதியை சேர்ந்த விமல் விக்னேஷ் என்பவர் படுகாயம்அடைந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் மாஞ்சோலை வைத்திய சாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் பாண்டியன்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## வவுனியா பல்கலை, கல்வியியற் கல்லூரி மாணவர்கள் 36 பேருக்கு கோவிட் உறுதி!




வவுனியா, ஜன. 28

வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் 36 பேருக்கு நேற்று முன்தினம் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்கள் இருவருக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் 1990 அவசர நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட துரித அன்ரிஜென் பரிசோதனையில் இருவருக்கும் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி மாணவர்கள் 50 பேருக்கு எழுமாறாக துரித அன்ரிஜென் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதில், மேலும் 18 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அத்துடன், வவுனியா பல்கலைக்கழகத்தில் காய்ச்சல் உள்ளிட்ட கோவிட் அறிகுறிகள் தென்பட்ட மாணவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட துரித அன்ரிஜென் பரிசோதனையில் 16 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் வவு னியா தேசிய கல்வியற் கல் லூரியில் 20 பேருக்கும், வவுனியா பல்கலைக்கழ கத்தில் 16 பேருக்குமாக 36 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், தொற்றாளர்களை தனிமைப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அத்துடன், மீண்டும் வவுனியாவில் கோவிட் தொற்று அதிகரித்து வரும் நிலையில் மக்கள் பொறுப்புடனும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியும் செயற்படுமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர். (அ)

## அதிபர்கள் இன்று வேலை நிறுத்தம்!

கொழும்பு, ஜன. 28

எட்டு அதிபர்கள் சங்கங்களை உள்ளடக்கிய அதிபர்கள் சங்க கூட்டமைப்பு இன்று ஒரு நாள் அடையாளப் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ள தீர்மானித்துள்ளது.

தொழிற்சங்க உறுப்பினர்கள் இன்று சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள். கடமைக்கு சமூகமளிக்க மாட்டார்கள்.

சம்பள திருத்தச் சுற்றறிக்கையினால் அதிபர்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதிக்கு உரிய தீர்வு கிடைக்காத காரணத்தால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

திருத்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர் குறித்த விடயம் தொடர்பில் உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் பியசிறி பெர்னாண்டோ, இன்று உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் பெப்ரவரி 3ஆம் திகதி போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்தார்.

இந்த போராட்டத்தில் பெருமளவிலான அதிபர்கள் கலந்துகொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## 4 வைத்தியர்கள் உட்பட 22 பேருக்கு நாவலப்பிட்டியில் கொரோனா உறுதி

கொழும்பு, ஜன. 28

நாவலப்பிட்டி வைத்தியசாலையின் நான்குவைத்தியர்கள், மூன்று தாதியர்கள், மருந்தாளர்கள் உட்பட 22பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. இதனையடுத்து வைத்தியசாலையின் 7 ஆம் இலக்க விடுதியை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரிவில் சேவையாற்றும் சுகாதார அதிகாரிகளுக்கே இவ்வாறு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு வைரஸ் தொற்றுக்கு இலக்கான ஒருவர் நாவலப்பிட்டி நகரில் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற இசை நிகழ்வொன்றிலும் கலந்துகொண்டுள்ளார். இதனால் பலருக்கு வைரஸ் தொற்றியிருக்கலாம் என அச்சம் வெளியிடப்படுகின்றது. (அ)

## உயர்தரப் பரீட்சைக்கு அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் கவனத்துக்கு!

எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள தனியார் பரீட்சாத்திகளுக்கு இதுவரையில் அனுமதி அட்டைகள் கிடைக்காவிடின், www. doenets.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், 2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான கால அட்டவணை அண்மையில் வெளியானது. இதன்படி, எதிர்வரும் 7ஆம் திகதி முதல் மார்ச் 5ஆம் திகதி வரை பரீட்சை கள் இடம் பெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# நெருக்கடியிலிருந்து அரசை மீட்பதற்கு புதிய பிரேரணை

## பங்காளிக் கட்சிகள் முன்வைப்பர்

கொழும்பு, ஜன. 28

**நாடு எதிர்கொண்டுள்ள பாரிய நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு உதவுவதற்காக அரசாங்கத்திடம் பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க அரசாங்கத்துடன் இணைந்த 10 கட்சிகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.**

கடந்த 25 ஆம் திகதி இரவு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் அதனை பகிரங்கப்படுத்த கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

நாட்டின் உண்மை நிலையை மக்களிடம் மறைக்காமல் மக்களுக்கு உணர்த்த வேண்டும் எனவும் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துரலிய ரத்ன தேரர், அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, எம்பிக்களான வீரசுமண வீரசிங்க, திரான் அலஸ், கெவிந்து குமாரதுங்க, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி ஜி.வீரசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)



## தென்மராட்சியில் முதியவரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 28

சாவகச்சேரி மறவன்புலவு, தனங்கிளப்புப் பகுதியில் வீடொன்றில் 62 வயதான முதியவரின் சடலம் மீட்க்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை அவரது வீட்டு விறாந்தையில் சந்தேகத்துக்கு இடமான நிலையில் கிடந்த முதியவர் தொடர்பில் அயலவர்கள் சாவகச்சேரி பொலிஸாரிடம் தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற சாவகச்சேரி பொலிஸார் பரிசோதித்தபோது குறித்த நபர் உயிரிழந்துள்ளமை தெரிய வந்தது.

உயிரிழந்தவர் மறவன்புலன் தனங்கிளப்பை சேர்ந்த 62 வயதான சுப்பிரமணியம் தவராசா என்பராவார்.

இவரது குடும்பத்தின் யாழ்ப்பாணத்தில் வசித்து வரும் நிலையில் இவர் பல காலமாக தனித்தே வசித்து வருவதாக கூறப்படுகிறது.

இறப்பு தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## 60 வீதமான குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ்!



கொழும்பு, ஜன. 28

இலங்கையில் குறைந்தது 60 வீதமான குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றன என ஸ்ரீலங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளமையும் இதற்கான முக்கிய காரணமெனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆண்டுக்கு ஆண்டு சராசரியாக 5 வீதம் முதல் 6 வீதம் வரை மட்டுமே உயரும் பொருட்களின் விலைகள், கடந்த மாதத்துக்குள் குறைந்தபட்சம் 14 வீதம் வரை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உணவுகூட வாங்க முடியாத நிலையேற்பட்டுள்ளதுடன், இன்று மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்னை பசி என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரிய அவர், சில குடும்பங்கள் சிரமத்துடன் ஒரு நாளைக்கு ஒருவேளை மட்டுமே உண்ண முடிவதாக கூறினார்.

நெடுஞ்சாலைகள் மற்றும் பல்வேறு உட்கட்டமைப்பு மேம்பாடுகளுக்கு இடையே, அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, தேவையற்ற அபிவிருத்திகளை ஒத்திவைத்து பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு அரசாங்கத்திற்கு திஸ்ஸ விதாரண அழைப்பு விடுத்துள்ளார். (அ)

## எதிர்வரும் வாரங்களில் மின்வெட்டு ஏற்படாது

கொழும்பு, ஜன. 28

மின்சார சபைக்கு எதிர்வரும் 10 நாட்களுக்கு தேவையான எரிபொருளை வழங்கவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, சப்புகஸ்கந்த மின் உற்பத்தி நிலையத்துக்கும் எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார். எனவே எதிர்வரும் வாரங்களில் மின்வெட்டு ஏற்படாது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## அரிய வகை உயிரினங்கள் கடத்த முயன்ற ரஷ்ய பிரஜைகளுக்கு நீதிமன்று அபராதம்

கொழும்பு, ஜன. 28

நுவரெலியாவிலுள்ள உலக முடிவு பகுதியிலுள்ள தேசிய பூங்கா மற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் பிடிக்கப்பட்ட விசேட 23 வகையான பூச்சிகள் மற்றும் 529 உயிரினங்களை நூதனமாக கொண்டு செல்ல முயன்ற ரஷ்ய நாட்டுப் பிரஜைகள் மூன்று பேருக்கு 86 இலட்சம் அபராதம் செலுத்துமாறும் தவறினால் மூன்று மாத சிறை தண்டனை விதித்து நுவரெலியா நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நுவரெலியா நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்த போதே நீதவான் ஜீ. ஜீ. பீ. ஜயசிங்க சந்தேக நபர்கள் மீது 102 குற்றங்களை பதிவிட்டு தீர்ப்பளித்துள்ளார்.

102 குற்றங்களையும் ஒப்பு கொண்டதற்கிணங்க தலா ஒருவருக்கு 28,55,000 வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று ரஷ்ய பிரஜைகளும் ஹோட்டன் பிளேஸ் வன பூங்கா, சீகிரியா, தம்புள்ள, யால, கினிகத்தேனை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருந்து இந்த பிராணிகளை பிடித்து மறைத்து வைத்திருந்த வேளையில் ஹோட்டன் பிளேஸ் வன பூங்கா பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக விசாரிக்கப்பட்டு வந்தது. (அ)

## ஒரு மின் உற்பத்தி நிலையத்தைக்கூட நல்லாட்சி அரசு நிர்மாணிக்கவில்லை

### இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 28

கடந்த அரசாங்கம் ஒரு மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்குகூட நடவடிக்கை எடுக்கவில்லை என இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்கு தெரிவித்த அவர், தற்போது ஏற்பட்டுள்ள மின் நெருக்கடி தொடர்பாக கடந்த அரசாங்கம் குற்றஞ்சாட்டி வருகின்றபோதிலும், ஒரு மின் உற்பத்தி நிலையத்தைகூட நிர்மாணிப்பதற்கு அந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

இலங்கையில் சுமார் 7 வருடங்களாக மின் உற்பத்தி நிலையம் இல்லை. 2030ஆம் ஆண்டளவில் 70வீதம் புதுப்பிக்கத்தக்க சக்தியை உருவாக்கும் ஜனாதிபதியின் வேலைத்திட்டம் சாத்தியமில்லாத வேலைத்திட் டம் அல்ல. அதுவும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வேலைத்திட்டம்.

மறுபுறம், அந்த திட்டம் நமது நாட்டின் அந்நிய செலாவணியை சேமிக்கிறது.

எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபைக்குள் உள்ள சில குழுக்கள் இந்த வேலைத் திட்டத்தை சீர்குலைக் கும் வகையில் செயற்படுகின்றன. அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிக்க வில்லை-என்றார். (அ)

## கோவிட் தடுப்பூசித் திட்டத்தின் ஓராண்டு பூர்த்தி நிகழ்வு நாளை

கொழும்பு, ஜன. 28

நாட்டில் கொவிட்-19 தடுப்பூசி இயக்கத்தின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு தேசிய தடுப்பூசி கொண்டாட்டங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாளை காலை சுகாதார அமைச்சில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு சமமாக ஒவ்வொரு மாகாணத்திலும் ஆளுநர்க ளின் தலைமையில் மாகாண கொண்டாட்டங்கள் நடத்த திட்ட மிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசேட கலந்துரையாடல் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையில் நேற்று முன் தினம் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே மற்றும் பேராசிரியர் சன்ன ஜயசுமன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சமய அனுஷ்டானங்களை முதன்மைப்படுத்தி, நாடு முழுவதும் ஒரே தொனிப்பொருளில் இந்நிகழ்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், நாளை முற்பகல் 10.06 மணிக்கு ஆசீர்வாத தீபம் ஏற்றப்படவுள்ளது. தடுப்பூசி திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்காக இலங்கைக்கு தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்கிய வெளிநாடுகளின் தூதுவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

# நாட்டில் நாளாந்தம் 2,000 தொற்றாளர்கள்!

## சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 28

**இலங்கையில் நாளாந்தம் 2 ஆயிரம் கொரோனா நோயாளிகள் பதிவாகுவதாகவும் உண்மையான தரவுகள் ஊடகங்களில் வெளியாகவில்லை என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**



இந்த விடயம் குறித்து அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவிக்கையில்-

தற்போது, இலங்கையில் பதிவாகும் கோவிட் நோயாளிகளின் எண்ணிக்கை வியத்தகு அளவில் அதிகரித்துள்ளது. நாளாந்தம் 2,000 கோவிட் நோயாளிகள் பதிவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. உண்மையான தரவுகள் ஊடகங்களில் வெளியாகவில்லை. வைத்தியசாலைகள் நிரம்பியுள்ளன. ஏற்கனவே இருந்த பல சிகிச்சை மையங்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளன மற்றும் சிகிச்சை மையங்கள் இப்போது முழுவதுமாக நிரம்பி வழிகிறது. நோயாளர்கள் இவ்வாறு தொடர்ந்து அதிகரித்தால், பலி எண்ணிக்கையும் அதிகரிக்கக்கூடும்-என்றார்.

எவ்வாறாயினும், தேவைக்கு ஏற்ப வைத்தியசாலைகளின் கொள்ளளவை அதிகரிக்குமாறு வைத்தியசாலை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். (அ)

# ஒமைக்ரோன் பிளாஸ்ரிக்கில் 8 நாட்களுக்கு உயிர் வாழும்!

லண்டன், ஜன. 28

உலகை அச்சுறுத்தி வரும் ஒமைக்ரோன் வைரஸ் பிளாஸ்ரிக் பரப்புகளில் 8 நாட்களுக்கு மேல் உயிர்வாழும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கொரோனா வைரசின் புதிய உருமாற்றமான ஒமைக்ரோன் வைரஸ் தோலில் 21 மணி நேரமும், பிளாஸ்ரிக் பரப்புகளில் 8 நாட்களுக்கு மேல் உயிர்வாழும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக ஜப்பானில் உள்ள கியோட்டா மாகாண மருத்துவ பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் இருந்து இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்போது, சீனா வின் வூகானில் உருவான கொரோனா தொடங்கி பல்வேறு மாறுபாடுகள் வரையில், சுற்றுச்சூழல்தன்மையின் வேறுபாடுகளை இவர்கள் ஆராய்ந்து உள்ளனர்.

இதில் ஒமைக்ரோன் வைரஸ் தோலில் 21 மணி நேரத்துக்கு மேலாக உயிருடன் இருக்கும், பிளாஸ்ரிக் பரப்புகளில் 8 நாட்களுக்கு மேல் உயிர்வாழும் என்ற தெரியவந்துள்ளது. கவலைக்குரிய மாறுபாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ள உருமாறிய கொரோனா வைரஸ்கள், சுற்றுச்சூழல் ஸ்திரத்தன்மை தொடர்பு பரிமாற்றத்தின் அபாயத்தை அதிகரிக்கும் மற்றும் அவற்றின் பரவலுக்கு பங்கு அளிக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

கொரோனா வைரஸ் பிளாஸ்ரிக் பரப்பின் மீது 56, ஆல்பா 191.3, காமா 59.3, பீட்டா 156.6, டெல்டா 114 மணி நேரம் வாழும், ஒமைக்ரோன் 191.3 மணி நேரம் வாழும். ஒமைக்ரோன் தோலில் 21 மணி நேரத்துக்கு மேலாக உயிர்வாழ்கிறபோது, ஆல்பா 19.6, பீட்டா 19.1, காமா 11, டெல்டா 16.8 மணி நேரம் உயிர்வாழும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உலக சுகாதார நிறுவனத்தால் முன்மொழியப்பட்டபடி, தற்போதைய தொற்று கட்டுப்பாடு (அடிக்கடி கை கழுவுதல்) நடைமுறைகளுக்கு, கிருமிநாசினிகளை (Hand sanitizer) பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# நாட்டில் 5 மில்லியனுக்கும் அதிகமானோருக்கு பூஸ்டர்

கொழும்பு, ஜன. 28


இலங்கையில் ஐந்து மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தடுப்பூசியின் மூன்றாவது டோஸான பூஸ்டர் டோஸை பெற்றுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

குறிப்பாக நேற்று முன் தினம் 30 ஆயிரத்து 325 பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

நாட்டில் கொரோனா வைரஸின் மற்றொரு சாத்தியமான அதிகரிப்பைத் தடுக்க, பூஸ்டர் டோஸைப் பெறுவதற்கு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை ஊக்குவித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையில் வெள்ளை அணில்

கொழும்பு, ஜன. 28



தென்னிலங்கையில் வெள்ளை நிறத்தினாலான அரியவகை அணில் ஒன்று கண்டுபிடிக் கப் பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத் தின் வஸ்கடுவ - சமுத்தி ரராமய விகாரைக்கு அருகில் வசிக்கும் தாரக தயான் என்பவரின் வீட்டுக்கே குறித்த அரியவகை அணில் நேற்று முன்தினம் வந்ததாக கூறப்படுகின்றது.

வெள்ளை நிற உடலை யும், சிவந்த கண்களையும் கொண்ட இந்த அணில் கூண்டில் அடைக்கப்பட்டுள்ளதுடன், பிரதேசவாசிகள் தேசிய மிருகக்காட்சிச்சாலைக்கும், களுத்துறை வடக்கு பொலிஸாருக்கும் அறிவித்துள்ளனர். மேலும், இந்த அணிலை பெருமளவானோர் வருகைத்தந்து பார்வையிட்டுள்ளனர்.

சுமார் ஒரு அடி நீளமுள்ள இந்த அணில் தேசிய மிருகக்காட்சிசாலையில் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# 2 இலட்சம் சிமெந்துப் பைகள் இன்று இலங்கை வந்தடையும்

கொழும்பு, ஜன. 28

2 இலட்சம் சிமெந்து மூடைகளைத் தாங்கிய மற்றுமொரு கப்பல் இன்று நாட்டை வந்தடைய உள்ளதாக சிமெந்து இறக்குமதியாளர்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

6 இலட்சம் சிமெந்து மூடைகளைத் தாங்கிய இரண்டு கப்பல்கள் கடந்த வாரம் நாட்டை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும், சந்தையில் அதிகரித்துள்ள கேள்வி காரணமாக, சில பகுதிகளில் சிமெந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மத்திய அதிவேக நெடுஞ்சாலை, துறைமுக நகர் மற்றும் நகர வீடமைப்புத் திட்ட நிர்மாணம் உள்ளிட்ட ஏனைய தனியார்த் துறை கட்டுமானப் பணிகளுக்காக அதிக கேள்வி உள்ளதாக சிமெந்து இறக்குமதியாளர்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர். (அ)

# மின் உற்பத்திக்கான டீசல் பாவனையால் அரசுக்கு மாதம் ரூ. 600 மில்லியன் நட்டம்

காழும்பு, ஜன. 28

களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்தின் அரசிற்குச் சொந்தமான சிறிய மின்முனையம் டீசல் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு இயக்கப்படுவதனால் அரசாங்கத்துக்கு நாளாந்தம் 20 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாக மின்சார சபையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய மாதாந்தம் அரசாங்கத்திற்கு சுமார் 600 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மின்னுற்பத்திக்கான விசேட எண்ணெய் மற்றும் டீசல் என்பன பயன்படுத்தப்பட்டுக் குறித்த மின்முனையம் இயக்கப்படவேண்டும்.

டீசல் மற்றும் மின்னுற்பத்திக்கான விசேட எண்ணெய் என்பன பயன்படுத்தப்பட்டு, மின்னுற்பத்தியை மேற்கொள்வதன் ஊடாக இலாபம் அடைய முடியும் என மின்சார சபை தக வல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் மின்னுற்பத்திக்கான எண்ணெய்யை மாத்திரம் பயன்படுத்திக் குறித்த மின் முனையத்தை இயக்குவதன் மூலம் அதிக இலாபம் அடைய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நாட்களில் டீசல் மற்றும் மின்னுற்பத்திக்கான எண்ணெய் என்பன பயன்படுத்தப்பட்டு களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்தின் அரசுக்குச் சொந்தமான சிறிய மின் முனையம் இயக்கப்பட்டது.

எவ்வாறாயினும் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் முழுமையாக மூடப்பட்டுள்ளமையினால் தற்போது களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலை யத்தின் அரசுக்குச் சொந்தமான சிறிய மின்முனையம் டீசல் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு இயக்கப்படுகின்றது.

எனவே, மின்னுற்பத்திக்கான எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாயின் குறித்த மின்முனையத்தை இலாபத்துடன் இயக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரி போட்டியிடவேண்டும்!

## பிரார்த்திக்கிறாராம் அமைச்சர் காமினி லொக்குகே

கொழும்பு, ஜன. 28

2024ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேட்பாளராக போட்டியிடவேண்டும் என பிரார்த்தித்துக் கொள்வதாக அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மைத்திரிபால சிறிசேன தனித்து போட்டியிடுவது சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு சாதகமாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்தும் பேசிய அவர்,

பொதுஜன பெரமுன ஆட்சிக்கு வருவதற்கு சுதந்திர கட்சி முழுமையாக ஆதரவு வழங்கியது.

ஆட்சிக்கு வந்ததன் பின்னர் கறிவேப்பிலையை ஒதுக்குவதை போன்று பொதுஜன பெரமுன சுதந்திர கட்சியை ஒதுக்கிவிட்டது என அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்ததால் சுதந்திரக் கட்சியின் 14 உறுப்பினர்கள் பாராளுமன்றுக்கு தெரிவானார்களா அல்லது சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்ததனால் தான் தேர்தலில் வெற்றியடைய முடிந்ததா என்பதை சுதந்திரக் கட்சியினர் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் சுதந்திரக் கட்சி தனித்து போட்டியிடவுள்ளதாக குறிப்பிட்டுள்ளதை வரவேற்கிறோம்.


2024ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட வேண்டும் என பிரார்த்தித்துக் கொள்கிறோம்.


சிறிலங்கா பொதுஜன பெரமுன எக்காரணிகளுக்காகவும் பிளவடையாது.

பொதுஜன பெரமுன கட்சியுடன் கூட்டணியடிப்படையில் இணைந்துள்ள பங்காளிக் கட்சிகள் சிலவேளை தேர்தல் காலத்தில் தனித்து தீர்மானங்களை முன்னெடுக்கலாம்.

ஜனநாயக ரீதியில் அரசியல் தீர்மானங்களை முன்னெடுக்கும் உரிமை அனைத்து தரப்பினருக்கும் உண்டு-என்றார். (அ)

# ஜீவாவை நினைவுகூரும் புதிய இரண்டு நூல்கள்




## மல்லிகை ஜீவா மறைந்து இன்றுடன் ஓராண்டு!

யாழ்ப்பாணத்தில் சாதாரண மத்திய தரக் குடும்பத்தில் பிறந்து, உயர்கல் வியை பெறுவதற்குரிய வாய்ப்பு வசதிகளை இழந்து, அறிஞர்களினதும் முற்போக்கு எழுத்தாளர்களினதும் நூல்களை வாசித்துப்பெற்ற அனுபவங் களினாலேயே மேதையாக வலம்வந்து, ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு கடுமையாக உழைத்திருக்கும் மல்லிகை ஜீவா, கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி கொழும்பில் தமது 93 வயதில் மறைந்தார்.

ஜோசப் - மரியம்மா தம்பதியருக்கு 1927 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி பிறந்திருக்கும் டொமினிக் ஜீவா, மல்லிகை எனும் கலை, இலக்கிய மாத இதழை 1966 ஆம் ஆண்டுமுதல், 2012 ஆம் ஆண்டு வரையில் வெளியிட்டார். இதுவரையில் நானூறுக்கும் மேற்பட்ட இதழ்கள் வெளியாகியிருக்கின்றன.

இவ்விதழ்களை நூலகம் ஆவண கத்தில் பார்க்கமுடியும்.

டொமினிக் என்பது அவரது இயற் பெயர். தமிழகத்திலிருந்து பொது வுடமை இயக்கத்தோழர் ஜீவானந்தம் பிரித்தானியர் காலத்தில் தலைமறைவாக இலங்கை வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த காலப்பகுதியில் அவரது கருத்துக் களினால் கவரப்பட்ட டொமினிக், தனது பெயருடன் ஜீவா என்ற எழுத்துக்களையும் இணைத்துக்கொண்டார்.

மல்லிகை ஆசிரியராகவும் பதிப்பாளராகவுமிருந்து சுயமுயற்சியோடு அதனை வெளியிடத்தொடங்கியதும், மல்லிகை ஜீவா என பரவலாக அறியப்பட்டார்.

அவரது இந்த நாமம் இலங்கையெங்கும் மட்டுமல்ல தமிழகத்தில் இலக்கியவாதிகள் மத்தியிலும் பரவியிருந்தது.

தமது இலக்கிய வாழ்வில் வெள்ளி விழா, மணிவிழா, பவளவிழா, அமுத விழா கண்டிருக்கும் ஜீவா, இன்னும் சில வருடங்கள் வாழ்ந்திருப்பின் நூற்றாண்டுவிழாவும் கண்டிருப்பார்.

ஜீவா, மல்லிகை இதழின் ஊடாக ஈழத்து இலக்கிய உலகிற்கு அறிமுகப் படுத்தியவர்கள் பலர். இலங்கையில் மூவின இலக்கியவாதிகளினாலும் ஆழ மாக நேசிக்கப்பட்டவர்.

சிறுகதை இலக்கியத்திற்காக ( தண்ணீ ரும் கண்ணீரும் ) இலங்கையில் முதல் முதலில் தேசிய சாகித்திய விருது பெற்றவரான ஜீவா, பின்னாளில் சாகித் திய ரத்னா, தேசத்தின் கண் முதலான உயரிய விருதுகளும், கனடா இலக்கியத் தோட்டத்தின் இயல் விருதும் பெற்றவர்.

மகாகவி பாரதி மறைந்து சுடுகாடு செல்லும்போது விரல்விட்டு எண்ணத் தக்கதாக ஒரு சிலர்தான் உடன் வந்தனர்.

கொரோனோ பெருந்தொற்று காலத்தில், ஜீவா - கொழும்பில் மின் மயானத்தில் தகனமாகும்போது ஒரே ஒரு ஜீவன்தான் அவரது பூதவுடல் தாங்கிய பேழையை பார்த்துக்கொண்டு நின்றது. அந்த ஜீவன், ஜீவாவின் ஏக புதல்வன் திலீபன்.

மல்லிகை ஜீவா எம்மத்தியில் நினைவுகளாக வாழ்ந்துகொண்டேயிருப்பார்.

மல்லிகை ஜீவா மறைந்து ஓராண்டாகியிருக்கும் இத்தருணத்தில், அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட மேற்கிலங்கையைச்சேர்ந்த கவிஞர் மேமன்கவி, மற்றும் முருகபூபதி ஆகியோர் இரண்டு நூல்களை வெளிக்கொணர்ந்துள்ளனர்.

கொழும்பில் வதியும் மேமன்கவி, டொமினிக் ஜீவாவும் நானும் என்ற நூலை ஜீவா மறைந்த தினத்தில் வெளியிடுகிறார். தனக்கும் ஜீவாவுக்குமிடையே நீடித்திருந்த இலக்கிய நட்புறவை இதில் விரிவாக பதிவுசெய்துள்ளார்.

அவுஸ்திரேலியா மெல்பனில் வதியும் முருகபூபதி, வாழும் வரலாறு மல்லிகை ஜீவா என்ற நூலை இந்த வாரம் இறுதியில் முதலில் மின்னூலாக வெளியிடுகிறார். ஜீவாவின் வாழ்வில் நிகழ்ந்த சுவாரசியமான சம்பவங்கள் இதில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

**தகவல்: முருகபூபதி**

---

# இனப்படுகொலைக்கான நீதி கிடைக்குமா?

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 27ம் நாள் ஐக்கிய நாடுகள் சபையின் உலகப் படுகொலை நாள். இந்நாளை ஆங்கிலத்தில் உலக ‘கொல கோஸ்ட்’ (Holocaust) நாள் என்பர். இந்த ‘கொலகோஸ்ட்’ என்ற ஆங்கிலச் சொல் தீயினால் சுட்டெரித்துச் சாம்பலாக்குதல் என்ற பொருள் கொண்டது. ஹிட்லரின் காலத்து ஆறு மில்லியன் யூத இனப்படு கொலையானது, யூத இனத்தையே சாம்பலாக்கிய வரலாறு என்னும் பின்னணியில் கட்டமைக்கப்பட்டது.

இந்த உலகப்படுகொலை நினைவேந்தல் நாள், 1933க்கும் 1945க்கும் இடையில் உலகில் யூத இனப்படுகொலைகள் நடந்தது போலவே, 1956க்கும் 2009க்கும் இடையில் இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இறைமையுடனும், ஒருமைப்பாட்டுடனும், தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளுடன் வாழ்ந்து வரும் ஈழத்தமிழ் மக்கள் தொடர்ச்சியான திட்டமிட்ட இன அழிப்பு அரசியல் நடவடிக்கைகளின் வழி இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 1வது 2வது உலகப் பெரும்போர்களின் அனுபவத்தில் மீளவும் கொடிய போர்கள் தோன்றி இனப்படுகொலைகள் நிகழ அனுமதிக்கக் கூடாதென்பதற்காக உருவாக்கப்பட்டது ஐக்கிய நாடுகள் சபை. ஆனால் 2009ம் ஆண்டு 21ஆம் நூற்றாண்டின் முதல் மனிதப்படுகொலை நாளாக முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழினப் படுகொலை நாளான 19.05. 2009 அமைந்தது என்பது சமகால வரலாறு.

இனப்படுகொலைகள் இனி நடைபெற அனுமதிக்கக் கூடாதென்ற ஐக்கிய நாடுகள் சபையும் அதன் உறுப்புரிமை நாடுகளும் ஈழத்தமிழினம் தங்கள் கண்களுக்கு எதிராகவே இனப்படு கொலை செய்யப்பட்டதை நாள்தோறும் நவீன தகவல் பரிமாற்ற வளர்ச்சி வழியாகத் தெளிவாக அறிந்த நிலையிலேயே அனுமதித்தன என்பது இன்றைய சமகால வரலாறு. இதனை புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்கள் உலக மக்களுக்கு உணர்த்தி, இனிமேலாயினும் உலக நாடுகளும், அமைப்புக்களும் ஈழத் தமிழினத்திற்கான பாதுகாப்பை வழங்கச் செய்தல் அவசியம்.

இந்த ஆண்டு உலக இனப்படுகொலை நாளில் ‘நினைவு, கண்ணியம், நீதி’ என்ற எண்ணக்கருக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதாவது இந்த உலகப் படுகொலை நாளில் 01. இனப்படுகொலைகளால் பாதிப் புற்ற ஒவ்வொருவரையும் நினைத்தல். இந்த நினைத்தலைப் பதிந்து வரலாறாக்குதல், 02 இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட இனத்தவரின் கண்ணியத்தையும், நீதியையும் நிலைநாட்டும் பெரும் பொறுப்பில் உலக மக்கள் அனைவரும் உள்ளனர் என்பதை உறுதியுடன் எடுத்துரைத்தல், என்பனவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இந்த செயல்முறைகளின் வழி ஈழத்தமிழர்களும் இனப்படுகொலைகளால் பாதிக்கப்பட்ட கிட்டிய குடும்ப உறுப்பினர்களுக்கு நிலைமாற்று நீதியை முன்னெடுக்க இவ்வாண்டில் முயலுதல் அவசியம்.

மேலும் 1944இல் போலந்தினரான யூதவழக்கறிஞரான இரெபெல் லெம்கின் என்பவராலேயே இனப்படுகொலை என்பதன் ஆங்கிலச் சொல்லான ‘ஜெனோசைட்’ (Genocide) உலக அரசியலில் கட்டமைக்கப்பட்டது. கிரேக்கத்தில் இனத்தைக் குறிக்கும் சொல்லான ஜெனோ (Geno) என்பதையும், கொல்லுதல் என்பதைக் குறிக்கும இலத்தீன் சொல்லான “சைட்” (Cide) என்பதையும் இணைத்தே ‘ஜொனோசைட்’ என்ற சொல்லினை உருவாக்கினார். அப்படியாயின் புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்களும் தங்களுடைய மக்களுக்கு நடாத்தப்பட்ட இனஅழிப்பு என்பது இறைமையழிப்பு (Sovereign-Cide) எனப் புதுச் சொல்லுருவாக்கத்தை உருவாக்க வேண்டும்.

**- இலக்கு.**




# உலக நாடுகளை பதற்றத்தில் ஆழ்த்தும் உக்ரைன் நெருக்கடி

ஆர்.என்.சர்மா

கொரோனா பெருந்தொற்றையே உலகம் மறந்துவிடக்கூடிய அளவுக்கு, ஐரோப்பிய கண்டத்தின் கிழக்கில் மிகப் பெரிய ராணுவ மோதல் ஏற்பட்டுவிடுமோ என்ற புதிய பதற்றம் அதிகரித்து வருகிறது. உக்ரைன் நாட்டை அதற்குப் பக்கத்தில் உள்ள ரஷ்யா எந்த நேரமும் ஆக்கிரமிக்க முற்படலாம் என்று அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும், அவை இடம் பெற்றுள்ள வட அட்லான்டிக் ஒப்பந்த நாடுகள் அமைப்பும் கூறி வருகின்றன.

உக்ரைன் எல்லைப்பகுதியில் கவச வாகனங்கள், டாங்குகள், பீரங்கிகள், ஏவுகணைகள், போர்விமானங்கள் ஆகியவற்றுடன் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட துருப்புகளையும் ரஷ்யா தயார்நிலையில் வைத்திருக்கிறது. ரஷ்யப் படைகள் உள்ளே நுழைந்தால் தடுப்பதற்கு உக்ரைன் ராணுவமும் தயாராக இருக்கிறது. உக்ரைனுக்கு உதவ நேட்டோ நாடுகளின் படைகளும் தயாராக இருக்கின்றன. அமெரிக்கா தன்னுடைய ராணுவத்தின் 8,500 துருப்புகளை தயார் நிலையில் இருக்கமாறு அறிவுறுத்தியிருக்கிறது. ரஷ்யா, இப்போது உக்ரைன் எல்லைக்கு அருகிலும், தான் ஆக்கிரமித்துள்ள கிரீமியாவிலும் போர் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளது. நேட்டோ நாடுகளும் தங்களுடைய போர் விமானங்களையும் போர்க்கப்பல்களையும் கிழக்கு ஐரோப்பாவுக்கு விரையுமாறு உத்தரவிட்டுள்ளன.

### இராஜதந்திரிகள் பேச்சு

இதற்கிடையே அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளின்கன், உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கியை கிவிவ் நகரில் சந்தித்து நிலைமை குறித்து கேட்டறிந்தார். நிதானமாக நடந்துகொள்ளுமாறும் சமரசப் பேச்சுகளுக்கு இடம் தருமாறும் ரஷ்ய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். உக்ரைனின் முன்னாள் அதிபர் பெட்ரோ பொரொஷென்கோ நாடு திரும்பிவிட்டார். தனக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள தேசத்துரோக வழக்கைச் சந்திக்கத் தயார் என்றும் நெருக்கடியான நேரத்தில் நாட்டு மக்களுடன் இருப்பதற்காக தாய் நாட்டுக்குத் திரும்பிவிட்டதாகவும் அறிவித்துள்ளார்.

உக்ரைனுக்குள் நுழைய ரஷ்யா தயாராகி வருகிறது. அப்படி ரஷ்ய இராணுவம் நுழைந்தால் பதிலுக்கு நாங்களும் விரைவாகவும் பெரிய அளவிலும் பதிலடிதருவோம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் எச்சரித்திருக்கிறார். ரஷ்யாவுக்கு எதிராகப் போர் தொடுக்க மாட்டோம், நேட்டோ அமைப்பின் செல்வாக்கை ஐரோப்பாவில் விரிவுபடுத்த மாட்டோம் என்று அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எழுத்துப் பூர்வமாக உறுதிமொழி அளிக்க வேண்டும், நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேரவும் கூடாது என்று ரஷ்யா மீண்டும் வலியுறுத்தியிருக்கிறது. கிரீமியாவை ரஷ்யா தன்னுடன்சேர்த்துக் கொண்டதால் உக்ரைனையும் அது ஆக்கிரமித்துவிடும் என்று நேட்டோ நாடுகளும் மக்களில் பெரும்பான்மையினரும் அஞ்சுகின்றனர்.

### உக்ரைனின் முக்கியத்துவம்

சோவியத் யூனியன் என்ற அமைப்பில் இருந்த பெரிய நாடுகளில் ஒன்று உக்ரைன். மொழி, கலாச்சார அடையாளத்தில் ரஷ்யாவுடன் சில பிரதேசங்கள் ஒத்துப்போவதால் உக்ரைனை ரஷ்யா தன்னுடைய அங்கமாகவே கருதுகிறது. ஆனால்அந்த நாட்டு மக்களோ தங்களை ஐரோப்பாவின் பிற நாடுகளுடன் அடையாளப்படுத்த விரும்புகின்றனர். தடையற்ற வர்த்தகம், முதலாளித்துவப் பொருளாதாரம், அதிக ஜனநாயக உரிமைகள், மேற்கத்திய நாடுகளின் நுகர்வுக் கலாச்சாரம், பொழுதுபோக்குகள் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட அவர்கள் பழைய சோவியத் ஒன்றியத்தின் கட்டுப்பெட்டியான வாழ்க்கை முறையிலிருந்து சுதந்திரமான வாழ்க்கைக்கு ஆசைப்படுகின்றனர். ஒன்றியம் என்ற வார்த்தையே அர்த்தமற்றுப் போன பிறகு மீண்டும், ரஷ்யாவின் பிடிக்குள் வாழ அவர்கள் அஞ்சுகின்றனர்.

பொருளாதாரத்தில் வளரும் நாடு உக்ரைன். மனித ஆற்றல் வளர்ச்சியில் உலகத்தில் 74-வது இடத்தில் இருக்கிறது. வறுமையும் ஊழலும் அதிகம். வளமான விவசாய நிலம் இருப்பதால் வேளாண் பொருள் ஏற்றுமதியில் முக்கியமான நாடாகத் திகழ்கிறது. ராணுவ பலத்தில் ரஷ்யா, பிரான்சுக்கு அடுத்து வருகிறது. குடியரசு நாடு, அதிபர் தலைமையிலான ஒற்றை ஆட்சி முறை நிலவுகிறது. நீதித் துறை, அரசு நிர்வாகத் துறை, சட்டமியற்றும் நாடாளுமன்றம் ஆகிய மூன்று முக்கிய உறுப்புகளைக் கொண்டிருக்கிறது. அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி. பிரதமர் டெனிஸ் ஷைமிஹால்.

### செல்வாக்கை மீட்க புதின் முயற்சி

ரஷ்யாவில் ஜனாதிபதி, பிரதமர், மீண்டும் ஜனாதிபதி என்று கடந்த 22 ஆண்டுகளாக ஆட்சி செய்து வருகிறார் விளாடிமிர் புட்டின். மக்களுக்கு புதினின் ஐக்கிய ரஷ்யா கட்சியின் ஆட்சி அலுத்துவிட்டது. ஆரம்ப காலத்தில் இருந்த பொருளாதார வளர்ச்சி இப்போது இல்லை. வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்து வருகிறது. ரஷ்ய அரசில் ஊழலும், வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டும் போக்கும், சலுகைசார் முதலாளித்துவ ஆதிக்கமும் வளர்ந்து வருகின்றன. ஆட்சியில் தானே தொடர வேண்டும் என்பதற்காக எதிர்க்கட்சிகளையும் எதிர்க்கட்சித் தலைவர்களையும் வெவ்வேறு காரணங்களைக் கூறி ஒடுக்கி வருகிறார் புட்டின்.

மக்களுடைய ஜனநாயக விருப்பங்களுக்கு மேற்கத்திய நாடுகள் தூபம் போடுவதால், நாட்டை பழைய கம்யூனிஸ்ட் ஆட்சிக்காலத்தைப் போல கட்டுக்குள் வைத்திருக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறார். ரஷ்யாவிலேயே இயற்கை எரிவாயு, கச்சா பெட்ரோலிய எண்ணெய் கிடைப்பது அரசுக்குப் பொருளாதார வளத்தைத் தந்திருக்கிறது. சோவியத்கால ராணுவ பலம் அப்படியே குறையாமல் இருக்கிறது. எனவே இவற்றைக் கொண்டு தானும் ஒரு வல்லரசுதான் என்று நிரூபிக்க புதின் முயல்கிறார். புதிய வல்லரசாகவும் பொருளாதார வலிமை மிக்க நாடாகவும் வளரும் சீனம், ரஷ்யாவை நெருக்கமான நண்பனாகப் பெற்றிருக்கிறது.

ஐரோப்பாவிலிருந்தும் மத்திய ஆசியாவிலிருந்தும் அமெரிக்காவை வெளியேற்றத் துடிக்கும் ரஷ்யாவுக்கும், சீனத்துக்கும் பொதுவான எண்ணமாக அமெரிக்க எதிர்ப்புணர்வு இருப்பதால் இரண்டும் இணைந்து செயல்படுகின்றன.

நெருக்கடி என்றால் சீனா நமக்குத் துணை நிற்கும் என்ற நம்பிக்கையில் அமெரிக்காவைச் சீண்டிப்பார்க்க விரும்புகிறார் புட்டின். ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறிய அமெரிக்கா இப்போதுதன்னுடைய நாட்டு தொழில், வர்த்தகத் துறைமீட்சியில் மட்டுமே அக்கறையாக இருக்கிறது. எனவே இந்த பலவீனமான நேரத்தில் ஐரோப்பிய நாடுகளை அச்சுறுத்தி வைக்க உக்ரைன் விவகாரத்தில் நேரடியாகத் தலையிடுகிறது ரஷ்யா.

இது இராணுவ பலக் கூட்டை அடிப்படையாகக் கொண்ட போட்டியாகவும் ஐரோப்பிய சந்தையை யார் பிடிப்பது என்ற வர்த்தகப் போராகவும் கூட இருக்கிறது. அதைவிட முக்கியம் இருபெரும் நாடுகளின் தலைவர்கள், தங்களுடைய அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடாமலிருக்க, தங்களை செல்வாக்குள்ள தலைவர்களாக காட்டிக் கொள்ளவும் இந்தப் பிரச்சினையைப் பெரிதாக்கி வருகின்றனர்.

முதல் இரண்டு உலகப் போர்களை விட மிகப் பெரிய போருக்கு உக்ரைன் விவகாரம் இட்டுச் செல்லும் என்று ஊடகங்கள் அஞ்சும் அளவுக்கு நிலைமை இருக்கிறது. இதற்கு ஒரே காரணம் உக்ரைன், ரஷ்யா இரண்டுமே அணு ஆயுதங்களைத் தயாரித்து வைத்துள்ளன. மோதல் முற்றி போர் மூண்டால் அணு ஆயுதங்களை இரண்டும் பயன்படுத்தும் என்ற அச்சமும் ஏற்பட்டிருக்கிறது. இதனாலேயே உலக நாடுகள் உக்ரைன் விவகாரத்தை கவனமாகப் பின்பற்றுகின்றன.

கொரோனா பெருந்தொற்று ஒயவில்லை. நோய்க் கிருமிகள் தொடர்ந்து உருமாற்றம் அடைகிறது. ஊரடங்கு உத்தரவுகள் மக்களுடைய அன்றாட வாழ்க்கையை மட்டுமல்லாமல் பொருளாதாரத்தையும் மிக மோச மாகப் பாதித்து வருகிறது. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி ராணுவ ரீதியாகவும் எதையாவது சாதித்து விட வேண்டும் என்று சில நாடுகள் தீவிரம் காட்டுகின்றன.

### ரஷ்யாவுக்கு அடுத்து பெரிய நாடு

கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நாடு உக்ரைன். பரப்பளவில் ரஷ்யாவுக்கு அடுத்த இடம், 6,03,628 சதுர கிலோ மீட்டர். மக்கள் தொகை 4.13 கோடி. தலைநகரம் கிவாவ். சோவியத் ஒன்றியம் சிதறியபோது 1991 இல் சுதந்திரம் பெற்றது. இதன் கிழக்கிலும் வட கிழக்கிலும் இருப்பது ரஷ்யா. வடக்கில் பெலாரஸ். மேற்கில் போலந்து, ஸ்லோவாகியா, ஹங்கேரி உள்ளன. தெற்கில் மால்டோவியா, ருமேனியா உள்ளன. ரஷ்யாவுக்கு அடுத்து ஐரோப்பாவில் மிகப் பெரிய இராணுவ நாடு.

1994இல் நேட்டோவுடன் கூட்டும் வைத்துக் கொண்டது. ஜனாதிபதியக இருந்த விக்டர் யனுகோவிச் ரஷ்ய சார்பு உள்ளவர். ஐரோப்பிய ஒன்றியத்துடன் உக்ரைன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறுத்திவைக்க முடிவு செய்தார். அதை மக்கள் ஏற்கவில்லை. ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தினர். மக்களுடைய ஐரோப்பிய சார்பு கிளர்ச்சிக்கு 'ஐரோப்பிய மைதான்' என்ற பெயரே ஏற்பட்டது. யனுகோவிச் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டார்.

2014 மார்ச்சில் கிரீமியாவை ரஷ்யா தன்னுடைய நாட்டுடன் சேர்த்துக் கொண்டது. ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஆழமான - அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய விரிவான வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்புவதாக உக்ரைன் அறிவித்தது. அதை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றது. இவ்வாறு உக்ரைன் ஐரோப்பிய நாடுகள் பக்கம் சாய்வது பின்னாளில் தனக்கு ஆபத்தாகிவிடும் என்று அஞ்சுவதால் ரஷ்யா இப்போது தீவிரமாகத் தலையிடுகிறது.

கிரீமியாவை ஆக்கிரமித்து தனது நாட்டுடன் சேர்த்துக் கொண்டதைப் போல உக்ரைனையும் சேர்த்துக் கொள்ளப் பார்க்கிறது. இதனாலேயே ரஷ்யாவுக்கு அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. பக்கத்து நாடுகளுடன் தேவையில்லாமல் எல்லைப் பிரச்சினை செய்யும் சீனாவும், ரஷ்யாவும் இப்போது தங்களுடைய வல்லாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவே தேவையின்றி முண்டா தட்டி வருகின்றன. இப்போதைக்கு இதுதான் உக்ரைன் நெருக்கடிக்கு ஒரே காரணம்.

ரஷ்யா சும்மா பயம் காட்டுமே தவிர உண்மையாகப் போர் செய்யாது என்றே பல நாடுகள் கருதுகின்றன. எது எப்படியானாலும் ரஷ்யா விதிக்கும் நிபந்தனைகளை ஏற்று, அது விரும்பியபடி போர் செய்ய மாட்டோம், நேட்டோ அமைப்பை விரிவுபடுத்த மாட்டோம், உக்ரைனை ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்த்துக்கொள்ள மாட்டோம் என்றெல்லாம் எழுத்துப் பூர்வமாக உத்தரவாதம் அளிக்க அமெரிக்காவும் தயாரில்லை. இதுதான் நெருக்கடி முற்றக் காரணம். ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

❖ **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. "முழு உலகையும் என்னால் வெற்றி கொள்ள முடியும்" எனும் செயற்பாடு ஆன்மீக நல்வாழ்விற்கான செயற்பாட்டில் எத்தனையாம் படிமுறை.
    1) படி -3 2) படி- 4 3) படி - 5

31. "தொன்புள்ளே வெதராளை" என அழைக்கப்பட்ட தேசிய வீரர் யார்?
    1) மொனராவில கெப்பெட்டிப்பொல திசாவ
    2) கொங்காலே கொட பண்டா
    3) வண எஸ். மஹிந்த தேரர்

32. உலக மரபுரிமையாகக் கணிப்புப் பெறாதது பின்வருவனவற்றுள் எது?
    1) சிங்கராசவனம் 2) தலதா மாளிகை 3) பின்னவல

33. வாக்காளர் இடாப்பில் பெயர் பதிவிற்குச் செல்ல வேண்டிய இடம் எது?
    1) தேசிய தேர்தல் ஆணையாளர் அலுவலகம்
    2) பொலிஸ் நிலையம்
    3) கிராம சேவையாளர் அலுவலகம்

34. நகர்ப்புறங்களில் உள்ள வீடுகளுக்குத் தேவையான நீர் விநியோகம் செய்யும் நிறுவனம் எது?
    1) நீர் வடிகாலமைப்புச் சபை
    2) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
    3) நீர் வடிகால் மற்றும் நீர் வழங்கு சபை

35. குருத்தோலைத் தினத்துடன் நெருங்கிய தொடர்புகொண்ட மதத்தவர்
    1) இந்துக்கள் 2) கிறிஸ்தவர்கள் 3) பௌத்தர்கள்

36. வறண்ட பிரதேச தாவரமாகக் கொள்ளப்படுவது?
    1) விடத்தல் 2) கண்டல்தாவரம் 3) குளவாழை

37. காற்றினால் பரம்பலடையும் வித்துக்கள் கொண்ட தொகுதி.
    1) எருக்கலை, பொன்னொச்சி, மூக்குத்திப் பூண்டு
    2) மஞ்சாடி, முருங்கை, இலவம்பஞ்சு
    3) குறிஞ்சா, சிறுநாரை, துத்திரி

38. சூழலுக்கு ஏற்ப பொய்க் கோலம் பூணும் பிராணிகள்
    1) பல்லி. அரணை 2) ஆமை, கணவாய் 3) பச்சோந்தி, ஒக்டோபஸ்

39. தனது இரையைக் கண்டறிவதற்கு மீசையைப் பயன்படுத்தும் பிராணி.
    1) மள்புளுட்டா 2) கபரக்கொயன் 3) பூனை

40. தேசிய இலச்சினையிலுள்ள நெற்கதிர் குறிப்பது
    1) தூய்மை 2) சௌபாக்கியம் 3) தன்னிறைவு

41. இலங்கைக்குரிய முலையூட்டியாக அமையாதது?
    1) கலவத்தன் 2) புலத்ஹுய்யா 3) கருங்குரங்கு

42. காடழிப்பதனால் ஏற்படும் விளைவுகள்,
    1) சூழல் வெப்பநிலை அதிகரித்தல், நிலவெடிப்புகள் தோன்றுதல்.
    2) மழை பெய்தல், தாவரங்கள் செழித்து வளர்தல்.
    3) சூழல் குளிர்ச்சி அடைதல், சுத்தமான காற்றுக்கிடைத்தல்.

43. நிலத்தில் முட்டையிட்டு நீரில் வாழும் உயிரினங்கள் எவை?
    1) நுளம்பு, ஆமை 2) முதலை, ஆமை 3) நுளம்பு, தவளை

44 எல்லே விளையாட்டில் விளையாடக் கூடிய ஆகக் குறைந்த வீரர்களின் எண்ணிக்கை.
    1) 16 வீரர்கள் 2) 14 வீரர்கள் 3) 12 வீரர்கள்

45. சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யப்படும் உபகரணம் எது?
    1) ஞாயிற்றுக்கலம் 2) மின் மணி 3) காற்றாலை மின்வலு

46. கிராம அலுவலகத்தில் சேவையைப் பெறுவோர்,
    1) இராணுவ அதிகாரிகள் 2) பிரதேச உறுப்பினர்கள் 3) கிராம மக்கள்

47. பின்வருவனவற்றுள் தொற்றுநோயாகக் கருத முடியாதது,
    1) கொப்பளிப்பான் 2) நுரையீரல் அழற்சி 3) செங்கண்மாரி

48. கலப்புணவு ஒன்றில் காணப்பட வேண்டிய உணவுத் தொகுதிகள்.
    1) சோறு, கிழங்கு, இறைச்சி, முட்டை, பருப்பு
    2) சோறு, கீரை, இறைச்சி, வாழைப்பழம், பருப்பு
    3) சோறு, கீரை, மீன். கிழங்கு, பூசணி

## விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 30) | 3 | 36) | 1 | 42) | 1 | 48) | 2 |
| 31) | 2 | 37) | 1 | 43) | 2 | | |
| 32) | 3 | 38) | 3 | 44) | 3 | | |
| 33) | 3 | 39) | 3 | 45) | 1 | | |
| 34) | 2 | 40) | 3 | 46) | 3 | | |
| 35) | 2 | 41) | 2 | 47) | 2 | | |

---

கல்வி tv CHANNEL-1

**28.01.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**28.01.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# 120 ரூபாய்க்குக் குறைய நெல்லை வழங்க முடியாது!

## விவசாயிகள் சங்கம்

கொழும்பு, ஜன. 28

ஒரு கிலோகிராம் நெல்லை 120 ரூபாய்க்கும் குறைவாக வழங்குவதற்கு தாம் தயாராக இல்லை என்று, பராக்கிரம சமுத்திர வர்த்தக விவசாயிகள் சங்கத்தின் தலைவர் ஜெகத் அருண கீர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

இரண்டு சிறுநீரகங்களையும் காப்பாற்ற இயற்கை உரத்தைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்திய அரசாங்கம், தற்போது வெளிநாடுகளிலில் இருந்து காபனிக் உரத்தை பயன்படுத்தி விளைந்த அரிசியையா இறக்குமதி செய்கின்றது?

காபனிக் உர பயன்பாடு காரணமாக இன்று விவசாயிகள் விவசாயத்தை கைவிடும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

விளைச்சல்கள் 40, 50 சதவீதமாகக் குறைந்துள்ளன. ஏனைய மாவட்டங்களில் நெல் விளைச்சல் 60 சதவீதமாகக் குறைந்துள்ளது. இதற்கு மாற்றீடாக விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்காக 40,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறியுள்ளார். அமைச்சரின் கருத்து தொடர் பில் மீண்டும் மீண்டும் கவனம் செலுத்துமாறு நாட்டிலுள்ள சகல விவசாயிகளுக்கும் நாம் கோரிக்கை விடுக்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(கே)



# சமுர்த்தி அரணலு திட்டத்தின்கீழ் 40 பேருக்கு வாழ்வாதார உதவிகள்!

திருக்கோவில், ஜன. 28

அம்பாறை மாவட்டம் பொத்துவில் சமுர்த்தி அரணலு வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக 40 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப் பட்டுள்ளன.

இந்த வாழ்வாதார உதவிகள் கையளிக்கும் நிகழ்வு பொத்துவில் பிரதேச செயலக சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ. அரசரெத்தினம் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றன.

இதன்போது பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் வாழும் குடும்பங்களில் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சமுர்த்தி அரணலு வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக 40 குடும்பங்களுக்கு சுமார் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டு இருந்தன.

இந்த வாழ்வாதார உதவிகளை வழங்குவதன் ஊடாக உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் அரசாங்கத்தால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். எம். முஷாரப் பொத்துவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம். ஜே. பிரனாஸ் சமுர்த்தி திட்ட முகாமையாளர் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## மரண அறிவித்தல்

மலர்வு 19 - 05 - 1958



உலர்வு 26 - 01 - 2022

### திருமதி ராஜேஸ்வரி யோகறட்ணம்

யாழ். வேலம்பிராய் தச்சந்தோப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ராஜேஸ்வரி யோகறட்ணம் அவர்கள் 26.01.2022 புதன்கிழமை அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பையா - தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மகளும், சின்னத்துரை - ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், யோகறட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், பால்ராஜ்(லண்டன்), பாலினி(சுவிஸ்), கமல்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,ரஜனி(லண்டன்), பதீஸ்வரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,தரணி, ரிஷ்வியா, யாதவன் (சுவிஸ்), பகிரதன், பானுஜா, ராக்சிகா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும்,அருளானந்தம், காலஞ்சென்ற சந்திரதேவி, புண்ணியமூர்த்தி, ராஜரட்ணம், உதயகுமார், அரசகுமாரி, கருணாநிதி, கருணாகரன்(ஜேர்மனி), தயாகரன்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,நாகபூசணி, நல்லமுத்து, ரஜனி, கனகேஸ், குஞ்சு, கீதஞ்சலி, ரவீந்திரன், அனுஷா, நந்தா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.01.2022 ஞாயிற்றுக் கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**நிஷான் (மருமகன்) : +447397556801**
**பாலு (மகன்) : +447984309664**
**பாலினி (மகள்) :₊41799416324**
**கமல் (மகன்) : +33751246521**
**கருணாநிதி (சகோதரன்) : +94772561879**
**ரமேஸ் (பெறாமகன்) : +94777751793**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# கல்வி பலத்தை தக்கவைப்பதன் மூலம் தமிழர்கள் இருப்பை தக்கவைக்கலாம்!

மட்டக்களப்பு, ஜன. 28

“தமிழர்களுக்கு உள்ள பலம் இன்றைய நிலையில் கல்வியாகும். அதனை தக்கவைப்பதன் மூலமே நாங்கள் எங்கள் இருப்பினை தக்கவைத்துக் கொள்ள முடியும்”, என சுவிஸ் உதயம் கிழக்கு மாகாண கிளை தலைவரும் முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளருமான மு. விமலநாதன் தெரிவித்தார்.

நாங்கள் என்ன பிரச்னைக்கு முகம்கொடுத்தாலும் கல்வியென்ற விடயத்திலிருந்து விலகிச்செல்லக்கூடாது என்றும் கூறினார்.

சுவிஸ் உதயம் அமைப்பின் ஊடாக கிழக்கு மாகாணத்தில் உள்ள வறிய மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் பல்வேறு செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி இராமகிருஷ்ணமிஷன் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 54 மாணவர்களுக்கு காலணிகள் வழங்கிவைக் கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் உள்ள வறிய நிலையில் உள்ள மாணவர்களின் கல்விச்செயல்பாடுகளை தங்கு தடையின்றி கொண்டுசெல்லும் வகையில் சுவிஸ் உதயம் தாய்ச்சங்கத்தினால் கிழக்கு மாகாண கிளை ஊடாக தொடர்ச்சியான உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

இதன்கீழ் ஆரையம்பதி இராமகிருஷ்ணமிஷன் மகா வித்தியாலய மாணவர்களின் நிலைமைகள் குறித்து சுவிஸ் உதயம் தாய்ச்சங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை தொடர்ந்து பொருளாளரும் தொழிலதிபருமான க. துரைநாயகத்தின் உதவியுடன் இந்த பாதணிகள் வழங்கிவைக்கப் பட்டன.

சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண தலைவர் மு. விமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுவிஸ் உதயம் தாய்ச்சங்கத்தின் பொருளாளரும் தொழிலதிபருமான க. துரைநாயகம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். சிறப்பு அதிதியாக செயலாளர் திருமதி றொமிலா செங்கமலன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## போதை பொருட்களுடன் ஐந்து பேர் நேற்று கைது!

கொழும்பு, ஜன. 28

கொழும்பு, கம்பகா, களுத்துறை மாவட்டங்களின் பல்வேறு பிரதேசங்களில், பலர் போதைப் பொருட்களுடன் நேற்று முன்தினம் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

களுத்துறை பாணந்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அஜ்மிர் மாவத்தையில், 21 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயினுடன் வாழைத்தோட்டத்தை சேர்ந்த 27 வயது நபர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெவொல்மடுவத்த பிரதேசத்தில் 7 கிராம் 240 மில்லிகிராம் ஹெரோயினுடன் இதம்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 28 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கல்கிசை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட படோவிட்ட பிரதேசத்தில் 6 கிராம் 190 மில்லிகிராம் ஹெரோயினுடன் கல்கிசையை சேர்ந்த 47 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பகா ஜாஎல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வஹட்டியம பிரதேசத்தில் 46 லீற்றர் 500 மில்லிலீற்றர் மதுபானத்துடன் ஜாஎல, போப்பிட்டிய பிரதேசங்களை சேர்ந்த 31, 49 வயதுகளையுடைய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(கே)

# சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தரின் கூட்டம்!

மட்டக்களப்பு, ஜன. 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் பணியாற்றும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்கான மீளாய்வு கூட்டம் நேற்று நடைபெற்றது.

மாவட்டத்தின் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் வி. குகதாசன் ஏற்பாட்டில் உதவி மாவட்ட செயலாளர் ஏ. நாவேஸ்வரன் தலைமையில் மாவட்ட சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு அலுவலகத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கீழ் 2022ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள சிறுவர் நலன் சார்ந்த வேலைத் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. அத்துடன், அதற்கான வழிகாட்டல் கையேடுகளும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

**மணமகள் தேவை**

ஆண் 31 வயது, யாழ். இந்து வேளாளர், சுதுமலை, சைவபோசனம், உத்தரட்டாதி நட்சத்திரம் B.Sc(special) Computational Physics (Colombo) - ஆசிரியர் (physics & Computer Science) சைவபோசனமுடைய பெண் விரும்பத்தக்கது. ஆனால் கட்டாயமில்லை.

தொலைபேசி - 0762213233

# ரஷ்யாவின் கோரிக்கையை நிராகரித்தது அமெரிக்கா!

நியூயோர்க், ஜன. 28

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கக்கூடும் என்று மேற்குலக நாடுகள் எச்சரிக்கை விடுத்து வரும் சூழலில் உக்ரைனை நேட்டோ அமைப்பில் சேர்க்கக்கூடாது என்ற ரஷ்யாவின் கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் அன்ரனி பிளிங்கன் ரஷ்யாவுக்கு வழங்கியுள்ள அலுவல்பூர்வமான பதிலில் இதைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா வழங்கியுள்ள பதிலை தங்கள் நாடு ஆய்வு செய்துவிட்டு தங்கள் தரப்பை தெரிவிக்கும் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லாவ் ரோவ் கூறினார்.

உக்ரைனுடனான ரஷ்ய எல்லையில் சுமார் ஒரு லட்சம் ரஷ்ய வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். உக்ரைன் உடனான எல்லையில் படைகளை தொடர்ந்து அதிரித்து வரும் ரஷ்யா அந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்தும் திட்டம் எதுவும் இல்லை என்று கூறி வருகிறது. (அ)







# 6ஆவது ஏவுகணையையும் நேற்று பரிசோதனை செய்த வடகொரியா!

## தொடர் சோதனைகளால் அண்டை நாடுகள் அச்சம்

பியொங்யாங், ஜன. 28

வட கொரியா, நேற்று வியாழக்கிழமை கிழக்குக் கடலில் அடையாளம் தெரி யாத ஏவுகணையை சோதனை செய்துள்ளதாக தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இந்த ஆண்டு வட கொரியா ஆறா வது முறையாக ஏவுகணை சோதனையை முன்னெடுத்துள் ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பேச்சுவார்த்தைக்கு வருமாறு அமெரிக்கா விடுத்த அழைப்பை புறக்கணித்த வட கொரியா, தொடர்ந்து தனது இராணுவ வலி மையைப் பறைசாற்றி வருகின்றது.

கடந்த 5ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் இரண்டு ஹைப்பர் சோனிக் ஏவுகணைகளையும், 14ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் சந்தேகத்திற்கிடமான பாலிஸ்ரிக் ஏவுகணை சோதனையையும் நடத்தியதாக வட கொரியா அறிவித்தது.

கிழக்கு கடற்கரையிலுள்ள ஹம்ஹங் வழியாக, தனது அண்டை நாடான வடகொரியா, இரண்டு சந்தேகத்திற்கிடமான பாலிஸ்ரிக் ஏவுகணைகளை ஏவியதாக தென் கொரியா குறிப்பிட்டது. (அ)

# பதவி விலகல் கோரிக்கையை நிராகரித்த பொரிஸ் ஜோன்சன்!

லண்டன், ஜன. 28

பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கையை பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் நிராகரித்துள்ளார்.

டவுனிங் வீதியில் உள்ள பிரதமர் வீட்டில் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு எதிரான ஒன்றுகூடல்கள் நடத்தப்பட்டமை குறித்து பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

டவுனிங் வீதி, ஒயிட் ஹால் ஆகிய இடங்கள் முழுவதும் கடந்த இரண்டு ஆண்டுகளில் கொரோனா கட்டுப்பாடுகளை மீறிய சம்பவங்கள் குறித்தே பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிரதமர் பொரிஸ் ஜோன்சனின்



பிறந்தநாள் கொண்டாட்டம் நடந்ததாகக் குற்றச்சாட்டு எழுந்த தைத் தொடர்ந்து இத்தகைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பிரிட்டனில் முதல் முடக்கநிலை அறிவிக்கப்பட்டபோது 10 டவுனிங் வீதியில் பிரதமரின் பிறந்த நாளைக் கொண்டாட ஒன்றுகூடியதாக ஊழியர்கள் சிலர் ஒப்புக கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், பிரதமரின் அலுவலகத்திலும், அரசாங்கத்தின் வேறு சில கட்டடங்களிலும் இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் விதிமீறல் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பிரிட்டன் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கையை பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் நிராகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதேவேளை, பொரிஸ் ஜோன் சனுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் விசாரணைகள் குறித்த உத்தி யோகப்பூர்வ அறிக்கை விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப் படுகின்றது. (அ)

# கொரோனா கட்டுப்பாடுகளுக்கு டென்மார்க்கில் முற்றுப்புள்ளி!

## இனி முகக்கவசம் அணியத் தேவையில்லை!

கொப்பன்ஹேஹன், ஜன. 28

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் முதல் நாடாக கொரோனா கட்டுப்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க டென்மார்க் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் பொது இடங்களில் மக்கள் முககவசம் அணியவேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தடுப்பூசி அட்டை நடைமுறை இனி இல்லை எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும் பொது முடக்கம், இரவு நேர ஊரடங்கு, பார், கேளிக்கை பூங்கா உள்ளிட்ட அனைத்தும் முன் கூட்டியே மூடுமாறு விதிக்கப்பட்ட உத்தரவு இரத்து செய்யப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி மூலம் கொரோனா மற்றும் ஒமைக்ரோன் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக டென்மார்க் பிரதமர் தெரிவித்துள்ளார். (அ)

# 7 நாளில் 2 கோடி பேர் பாதிப்பு கடும் உச்சத்தில் கொரோனா!

நியூயோர்க், ஜன. 28

உலகளவில் இதுவரை இல்லாத வகையில் கடந்த 7 நாட்களில் கொரோனாவால் 2 கோடியே 10 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனம் இம்மாதம் 17 தொடக்கம் 23ஆம் திகதி வரை கொரோனா பாதிப்பு பற்றிய புள்ளி விவரத்தை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த 7 நாட்களில் புதிதாக 2 கோடியே 10 இலட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா பரவல் ஆரம்பித்த காலத்தில் இருந்து ஒப்பிட்டு பார்க்கும்போது தற்போதுதான் ஒரு வாரத்தில் பாதிப்பு எண்ணிக்கை இந்த அளவிற்கு உயர்ந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு கொரோனா வைரஸின் உருமாறிய 'டெல்டா' வகையை விட 'ஒமைக்ரொன்' வேகமாக பரவுவது தான் காரணம். இதே வாரத்தில் 50,000 பேர் கொரோனாவால் இறந்துள்ளனர்.

ஜனவரி 23ஆம் திகதி வரை மொத்தமாக உலகளவில் 34 கோடியே 60 இலட்சம் பேர் கொரோனா பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். 55 இலட்சம் பேர் இறந்துள்ளனர். மதிப்பீட்டு வாரத்தில் அமெரிக்காவில் அதிகபட்சமாக 42 இலட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த பாதிப்பு பிரான்ஸில் 24 இலட்சம், இந்தியாவில் 21 இலட்சம், இத்தாலியில் 12 இலட்சம் என்ற அளவிற்கு உள்ளது. அமெரிக்காவில் கொரோனா இறப்பு வீதமும் அதிகமாக உள்ளது. (அ)



# நெதர்லாந்தில் கொரோனா கட்டுப்பாடுகளில் தளர்வு!

அம்ஸ்ரடாம், ஜன. 28

நெதர்லாந்தில் கொரோனா கட்டுபாடுகளை தளர்த்துவது குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நிபந்தனைகளுடன் மதுபானக் கடைகள், உணவு விடுதிகள், அருங்காட்சியகங்கள், திரையரங்குகள் மற்றும் ஏனைய இடங்களை திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று சம்பவங்கள் முன்னர் இல்லாத அளவுக்கு அதிகரித்திருக்கும் நிலையிலேயே நெதர்லாந்து அரசாங்கம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நெதர்லாந்தில் 90 வீதமானவர்கள் முழுமையான தடுப்பூசி பெற்றபோதும், 57 வீதமானவர்களே பூஸ்டர் தடுப்பூசி பெறுவதற்கு முன்வந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (அ)



# சினாரை இலகுவாக வீழ்த்தி அரையிறுதியில் டிசிட்சிபாஸ்!

மெல்பர்ன், ஜன. 28

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு இத்தாலியின் சினாரை வீழ்த்தி கிறீஸின் டிசிட்சிபாஸ் முன்னேறினார்.

வருடத்தின் முதல் கிராண்ட்ஸ்லம் போட்டியான அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் மெல்பர்னில் தற்போது நடந்து வருகின்றது. இதில், நேற்றுமுன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் கிறீஸின் டிசிட்சிபாஸ், இத்தாலியின் சினார் மோதினர்.

முதல் செற்றை 6:3 என வென்ற டிசிட்சிபாஸ், அடுத்த செற்றையும் 6:4 எனக் கைப்பற்றினார். தொடர்ந்து அசத்திய இவர் அடுத்த செற்றை 6:2 என எளிதாக வசப்படுத்தினார்.

முடிவில் டிசிட்சிபாஸ் 6:3, 6:4, 6:2 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். (ஐ)

# இலங்கை அணியின் பயிற்றுநராக மலிங்க!



கொழும்பு, ஜன. 28

இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளரும், ஒருநாள் மற்றும் இருபது - 20 அணிகளின் முன்னாள் தலைவருமான லசித் மலிங்க பந்துவீச்சு பயிற்றுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்து ஆரம்பமாகவுள்ள அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தில் இவரின் பணி ஆரம்பமாகவுள்ளது என்று இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

சிறப்பு பயிற்றுநராக பொறுப்பேற்கும் மலிங்க குறுகிய காலமே - பெப்ரவரி 1 முதல் 20 வரையே அணிக்கு பங்களிப்பு வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது. அவர், தந்திரோபாய - நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கி, மூலோபாய திட்டங்களை களத்தில் செயல்படுத்த உதவுவார்.

மலிங்கவின் பரந்த அனுபவமும், புகழ்பெற்ற டெத்-பவுலிங் நிபுணத்துவமும், குறிப்பாக இருபது - 20 வடிவத்தில், இந்தத் தொடருக்கு அணிக்கு பெரிதும் உதவும் என்று இலங்கை கிரிக்கெட் சபை நம்புகிறது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள மலிங்க, எங்களிடம் சில திறமையான இளம் பந்துவீச்சாளர்கள் உள்ளனர். மேலும், எனது அனுபவத்தையும் அறிவையும் பகிர்ந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவர்களை மேம்படுத்துவதற்கு உதவுகிறேன்", என்றார். (ஐ)

# இங்கிலாந்துடனான தொடர் மே. இ. தீவுகள் முன்னிலை!

பிரிட்ஜ்டவுன், ஜன. 28

மேற்கிந்தியத் தீவுகள் - இங்கிலாந்து அணிகள் மோதிய 3ஆவது இருபது - 20 போட்டி பிரிட்ஜ்டவுனில் நேற்றுமுன்தினம் இரவு நடந்தது. முதலில் விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 224 ஓட்டங்கள் குவித்தது.

4ஆவது வீரராக களமிறங்கிய ரோவ்மேன் பாவேல் அதிரடியாக ஆடி சதம் அடித்தார். அவர் 53 பந்தில் 107 ஓட்டங்களும் (4 பௌண்ட்ரி, 10 சிக்ஸர்), நிக்கோலஸ் பூரன் 43 பந்தில் 70 ஓட்டங்களும் (4 பௌண்ட்ரி, 5 சிக்ஸர்) எடுத்தனர்.

பின்னர் ஆடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 204 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் மேற்கிந்தியத் தீவுகள் 20 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ரொம் பண்ரன் 39 பந்தில் 73 ஓட்டங்களும் (3 பௌண்ட்ரி, 6 சிக்ஸர்), பில்சால்ட் 24 பந்தில் 57 ஓட்டங்களும் (3 பௌண்ட்ரி, 5 சிக்ஸர்) எடுத்தனர்.

இந்த வெற்றி மூலம் 5 போட்டி கொண்ட தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. (ஐ)



# இறுதிக்கு முன்னேறினார் ஆஸியின் ஆஷ்லே பார்ட்டி!



மெல்பர்ன், ஜன. 28

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்துக்கு அவுஸ்திரேலிய அணியின் ஆஷ்லே பார்ட்டி முன்னேறியுள்ளார்.

வருடத்தின் முதல் கிராண்ட்ஸ்லம் போட்டியான அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் மெல்பர்னில் தற்போது நடந்து வருகின்றது.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் அரையிறுதி போட்டி நேற்று வியாழக்கிழமை நடந்தது. இதில், அமெரிக்காவின் மடிஷன் கீஸை எதிர்த்து ஆடினார் ஆஷ்லே பார்ட்டி.

6 -1, 6 - 3 என்ற செற் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்ற ஆஷ்லே பார்ட்டி இறுதியாட்டத்துக்கு முன்னேறினார்.

2019 பிரெஞ்சு, 2021 விம்பிள்ட் போட்டிகளின் சம்பியனான இவர் அவுஸ்திரேலிய ஓப்பனில் முதன்முறையாக இறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஆஸி. பகிரங்க ரென்னிஸ் அரையிறுதியில் ஸ்வியாரெக்!

மெல்பர்ன், ஜன. 28

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு போலந்தின் ஸ்வியாரெக் முன்னேறியுள்ளார்.

வருடத்தின் முதல் கிராண்ட்ஸ்லம் போட்டியான அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் மெல்பர்னில் கடந்த 17ஆம் திகதி ஆரம்பமானது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில், நேற்றுமுன்தினம் நடந்த காலிறுதிப் போட்டியில் போலந்தின் ஸ்வியாரெக், எஸ்தோனியாவின் கையா கனேபியை சந்தித்தார்.

முதல் செற்றை கனேபி 6:4 என வென்றார். பின்னர் சுதாரித்துக் கொண்ட ஸ்வியாரெக், 'ரை பிறேக்கர்' வரை சென்ற அடுத்த செற்றை 7:6 என தன் வசப்படுத்தினார். மூன்றாவதும் இறுதியுமான செற்றிலும் ஆதிக்கம் செலுத்திய ஸ்வியாரெக், 6:3 என வென்றார்.

இறுதியில், ஸ்வியாரெக் 4:6, 7:6, 6:3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறினார். (ஐ)

# கொரோனா மரணவீதம் வெகுவாக அதிகரிக்கும்!

## வைத்தியர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 28

"நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், நாட்டை மீண்டும் முடக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டால் அது பெரும் தாக்கங்களுக்கு வழிவகுக்கும். எனவே, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான நடவடிக்கைகள் அவசியம்." - என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரான வைத்தியர் பிரசாத் கொலம்பகே வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியிருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் பாரதூரமான நிலைமை ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. எனவே, வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வைரஸின் பாரதூரத்தன்மையை மக்கள் மறந்துவிட்டனர். அது தொடர்பில் அவர்களை தெளிவுபடுத்த வேண்டும்.

இந்தியாபோன்ற நாடுகளில் வைரஸ் பரவல் தலைதூக்கியுள்ளது. இதனால் மாநிலங்கள் முடக்கப்பட்டுவருகின்றன. எமது நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மக்களும் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் நாட்டை முடக்கினால் ஏற்படும் பாதிப்புகளை இலகுவில் கணித்துவிடமுடியாது.

அதேவேளை, எதிர்காலத்தில் கொரோனா மரண வீதமும் அதிகரிக்கும்-என்றார். (அ)

# 26 நாட்களுக்குள் மட்டும் 6,896 பேருக்கு டெங்கு!

கொழும்பு, ஜன. 28

நாட்டில் கடந்துள்ள 26 நாட்களில் மாத்திரம் 6 ஆயிரத்து 896 பேர் டெங்கு நோயி னால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் சமூக வைத்திய நிபுணர் ஷிலந்தி செனவிரத்ன தெரிவித்தார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மாத்தறை, மன்னார், மட்டக்களப்பு, காலி, திருகோணமலை, யாழ்ப்பாணம், பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலே டெங்கு நோய் வேகமாக பரவிவருகின்றது என சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

எனவே, டெங்கு நோய் பரவாத விதத்தில் சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்குமாறு சுகாதார தரப்பினர், பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். எவருக்காவது நோய் அறி குறிகள் தென்படும்பட்சத்தில் உடன் வைத்திய ஆலோசனையை பெறுமாறு கோரப்பட்டுள்ளது. (அ)

# சமையல் எரிவாயு லொறியை முற்றுகையிட்டனர் மக்கள்!

கொழும்பு, ஜன. 28

சமையல் எரிவாயு சிலிண்டரை வழங்குமாறு கோரி, மக்கள் எரிவாயு ஏற்றிவந்த லொறியை சுற்றிவளைத்த சம்பவமொன்று நேற்று முன் தினம் மாலை கொழும்பு கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சமையல் எரிவாயுவை ஏற்றி வந்த, எரிவாயு முகவரிடம் தங்களுக்கு எரிவாயு சிலிண்டர் ஒன்றை வழங்குமாறு நுகர்வோர் கோரியுள்ளனர். அதற்கு மறுப்பு தெரிவித்த குறித்த முகவர், நுகர்வோரிடம் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

அதனை தொடர்ந்து அங்கிருந்த மக்கள் அனைவரும் ஒன்று கூடி லொறியை சுற்றிவளைத்து குறித்த லொறியை முற்றுகையிட்டனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றநிலை உருவானது. (அ)

# டெங்கு பரவலும் உச்சத்தில்!

கொழும்பு, ஜன. 28

இலங்கையில் கோவிட் தொற்றை போன்று டெங்கு தொற்றும் அதிகரித்துள்ளதாக லேடி ரிட்வே மருத்துவமனை அறிவித்துள்ளது.

வைத்திய கலாநிதி தீபால் பெரேரா இதனை தெரிவித்தார்.

எனவே காய்ச்சல் மற்றும் ஏனைய குணங்குறிகளால் பாதிக்கப்படுபவர்கள், குருதி அணுக்களின் எண்ணிக்கை தொடர்பில் வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை சிறுவர்கள் மத்தியில் கோவிட் தொற்றுக்கள் அதிகரித்துள்ளன.

கடந்த இரண்டு வாரங்களுக்குள் இரண்டு சிகிச்சை அறைகள் அதிகரிக்கப்பட்டு தற்போது மூன்று சிகிச்சை அறைகளில் கோவிட் தொற்றுக்கு உள்ளான சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருவதாக தீபால் பெரேரா குறிப்பிட்டார்.

இந்தநிலையில் நோய் தொற்றுக்கண்டவர்கள் மத்தியில் சுவாசப்பிரச்னை இருந்தால் மாத்திரம், மருத்துவனைகளை நாடுமாறும் ஏனைய குணங்குறிகள் உள்ளவர்கள் 1390 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு வீடுகளிலேயே, சிகிச்சை முறைகளை கையாளுமாறும் கேட்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ)



# யானையிடம் போராடி மகளின் உயிரைக் காப்பாற்றினார் தாயார்

கொழும்பு, ஜன. 28

அனுராதபுரத்தில் உயிரைப் பணயம் வைத்து யானையிடமிருந்து மகளை காப்பாற்றிய தாய் ஒருவர் தொடர்பான தகவல் வெளியாகி உள்ளது.

இந்த சம்பவம் தம்புத்தேகம, தெக்கவத்தை கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை செல்வதற்காக தயாராக இருந்த 13 வயதுடைய பாடசாலை மாணவி தனது பாட்டியின் வீட்டில் இருந்து தனது வீட்டை நோக்கி சென்றுள்ளார்.

இதன் போது திடீரென அவ்விடத்துக்கு வந்த காட்டு யானை சிறுமியை பல மீற்றர் தூரத்துக்கு தூக்கி வீசிய நிலையில் அவரை மிதித்து கொல்லத் தயாராகியுள்ளது.

உடனடியாக அவ்விடத்துக்கு வந்த தாய் மற்றும் பாட்டி யானையுடன் நீண்ட நேரம் போராடி மகளை காப்பாற்றியுள்ளனர்.

குறித்த சிறுமியின் பாட்டி வீட்டுப் பக்கம் யானை ஒன்று வந்துள்ளதாக கிடைத்த தகவலுக்கமைய சிறுமியும் அவரது தாயாரும் பாட்டியின் வீட்டுக்கு சென்றுள்ளனர்.

தாய் பாட்டியின் வீட்டில் இருந்த சந்தர்ப்பத்தில் சிறுமி தங்கள் வீட்டை நோக்கிச் சென்றுள்ளார். இதன்போது அங்கிருந்த யானை சிறுமியை தும்பிக்கையால் தூக்கி வீசிவிட்டு மிதித்து கொல்ல அங்கு வந்துள்ளது.

சத்தம் கேட்டு அவ்விடத்துக்கு வந்த தாயும் பாட்டியும் யானையிடம் போராடி சிறுமியை காப்பாற்றினர்.

உயிருக்கு ஆபத்தின்றி சிறிய காயங்களுடன் சிறுமி காப்பாற்றப்பட்டுள்ளார். (அ)

# மரண அறிவித்தல்

மலர்வு 11 - 09 - 1936



உலர்வு 24 - 01 - 2022

## கதிரித்தம்பி காசிநாதர்

(வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலை கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பொது முகாமையாளர்)

யாழ்.நீர்வேலி வடக்கு காமாட்சி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி காசிநாதர் அவர்கள் 24.01.2022 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி - செல்வரட்ணம் தம்பதியரின் ஏக புதல்வரும், காலஞ்சென்ற குமாரசுவாமி - தங்கம்மா தம்பதியரின் அருமை மருமகனும், கமலாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும், நமணி, ஸ்ரீகாந்தன் (ஆசிரியர் - கந்தளாய் பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம்), ஜெயகாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருள்மொழி (ஆசிரியை - புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), விஜிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லோகசறோஜா (கனடா) அவர்களின் அன்பு அண்ணாவும், செல்லத்துரை (கனடா - ஓய்வுபெற்ற நில அளவையாளர்), காலஞ்சென்ற கனகசுந்தரம், மகேஸ்வரி, குணவதி (ஜேர்மனி), மதிவதனா, இரவிச்சந்திரன் (பிரணவன் இரும்பகம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருஷ்ணதாஷன், சிவராஜா (ஜேர்மனி), மோகனதாஷ், புவனேஸ்வரி, சுபேந்திரா ஆகியோரின் அன்புச் சகலனும், லஷ்மிதா, லஷ்மிநாத் (சுவிஸ்), பிரவிநாத் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2022) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் சீயாக்காடு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**இரவிச்சந்திரன் (மச்சான்) - 077 716 1929**
**ஸ்ரீகாந்தன் (மகன்) - 077 087 8734**
**ஜெயகாந்தன் (மகன்) - 0041793392396**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## போட்டியிட...

யாழ்ப்பாணத்தில் நேற்று அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாம் மாகாணசபை தேர்தலில் போட்டியிடுவது 13ஐ கோரும் தரப்புகளுக்கே பிரச்னையாக இருக்கும். நாம் மாகாண சபையை கைப்பற்றி, அந்த வெற்றுக்கோஷத்தை அம்பலப்படுத்தி விடுவோம் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். அதனால் கட்டாயம் நாம் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளோம்.

கடந்தமுறை ஆயர் இராயப்பு யோசப் தலைமையில் நடந்த ஒரு கூட்டத்தில், மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு வென்று, இதிலுள்ள ஓட்டைகளை அம்பலப்படுத்தி, இதை தாண்டி அரசியலை கொண்டு செல்ல செயல்படுவோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வாக்குறுதியளித்தனர். மக்களை பகிஷ்கரிக்க அழைப்பு விட வேண்டாம் என்றார்கள். அதை நம்பினோம். ஆனால், இன்றுவரை அதை செய்யவில்லை.

எந்த அதிகாரமும் இல்லாத ஒன்றை தமிழ் மக்களிடம் திணித்து, வரப்போகிற அரசமைப்பில் 13ஆவது திருத்தம் உள்ளதாக கூறி மக்களை ஆதரிக்க வைக்கும் முயற்சியை முறியடிக்க நாம் போட்டியிட வேண்டும்.

நாம் 13ஆம் திருத்தத்தை நிராகரிக்கிறோம். எமக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை. கடந்த தேர்தலை எமது கட்சி பகிஷ்கரித்தது. ஆனால், மக்களை பகிஷ்கரிக்க கோரவில்லை. மாகாண சபை முறைமையின் அதிகாரமற்ற தன்மையை அம்பலப்படுத்தாமல், அதை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு கூட்டமைப்பு சென்றுள்ளதால், மாகாண சபை முறையை அம்பலப்படுத்தும் பொறுப்பை நாமே ஏற்க வேண்டும் - என்றார். (ஐ)

## சர்வதேச...

இந்த வருடத்தின் முதலாவது இராஜதந்திர மாநாடு வெளிநாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது இதன்போது உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

43 வருடங்களின் பின்னர் சர்வதேச நியதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டுவரும் நோக்கத்துடன் திருத்தப்பட்டு வருகிறது.

உத்தேசத் திருத்தங்கள் அடங்கிய சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் அதன் பின்னர் இறுதி அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்தில் சட்டமூலத்தை சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட நீண்ட கலந்துரையாடலின் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தப்பட்டு வருவதாக அமைச்சர் விளக்கமளித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முக்கிய திருத்தங்களில் தடுப்புக் காவல் உத்தரவு, கட்டுப்பாட்டு உத்தரவு, நீதித்துறை மீளாய்வு உத்தரவுகளை வெளிப்படையாக அங்கீகரித்தல் தொடர்பான பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளுதல், நீண்ட கால தடுப்புக் காவலில் வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான வழக்குகளை விரைவாகத் தீர்த்தல், சுதந்திரத்துக்கு இடையூறு விளைவிக்கும் பிரிவுகளை இரத்துச் செய்தல் போன்றனவும் திருத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## சர்வதேசத்தையும்...

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டு எதிர்வரும் மே மாதத்துடன் 13 வருடங்கள் ஆகவுள்ள நிலையில் நாங்கள் பல போராட்டங்கள், பேரணிகளை நடத்தியுள்ளோம். எத்தனையோ ஆணைக்குழுக்களுக்கும் ஏறி இறங்கிவிட்டோம். எந்தப் பதிலும் இல்லை.

மாறாக ஒவ்வொரு ஆணைக்குழுக்களும் எம்மை குழப்புகின்ற, அச்சுறுத்துகின்ற வகையில்தான் செயற்பட்டுள்ளன. நாங்களும் பல கடிதங்கள் ஆதாரங்களை வழங்கிவிட்டு ஐ.நா மனித உரிமை பேரவையிடமும் முறையிட்டுள்ளோம்.

எமக்கு சர்வதேசம் தான் பதில் தர வேண்டும். அவர்கள் தான் எமக்கு எங்கள் பிள்ளைளை,கணவன்மாரை சகோதரர்களை கண்டுபிடித்து தரவேண்டும். இந்த அரசாங்கத்தை நம்பிப் பலனில்லை.இவர்களின் ஆட்சியில்தான் இந்த இனவழிப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றன.

இவர்களிடம் எவ்வாறு உண்மையை பெற்றுக்கொள்ள முடியும்.நாங்கள் மூன்று ஜனாதிபதிகளை கண்டுவிட்டோம். எந்த பதிலும் இல்லை.

எதிர்வரும் பெப்ரவரி இறுதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் சர்வதேசத்தையும் எங்களையும் ஏமாற்றுவதற்காக வடக்கில் நீதி அமைச்சின் நடமாடும் சேவை இடம்பெறுகின்றது.

யாழ்ப்பாணத்தில் சனி, ஞாயிறு கிழமைகளில் இது நடைபெறவுள்ளது. இந்த நடமாடும் சேவையில் பல விடயங்கள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த சேவையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பில் எத்தகைய நடவடிக்கைகளுக்கும் யாரும் செல்ல வேண்டாம். இவர்களை நம்பி எந்த பலனும் இல்லை ஆகவே யாரும் செல்லக் கூடாது என்பதை தாழ்மையாக கேட்டுக் கொள்கிறோம்-என்றனர். (அ-03)

## சட்ட...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு கடல் எல்லையில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி செயற்பாடுகள் நீண்டகால பிரச்சினையாக காணப்படுகின்றது. நீதி அமைச்சு நேரடியாக தலையிட்டு இந்த விடயங்களை தீர்க்க முடியாது.

மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிச் செயற்பாடுகள் குறித்து இலங்கை கடற்படை, வெளிவிவகார அமைச்சு மற்றும் மீன்பிடித்துறை அமைச்சு ஆகியவற்றின் தலையீட்டுடனேயே இதனை முன்னெடுக்க முடியும்.

எனினும் இவர்களுடன் பேச்சு நடத்த நாம் எதிர்பார்க்கின்றோம். மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இது குறித்து பேசவுள்ளோம். அவசியமான சட்ட திருத்தங்களை செய்ய வேண்டும் என்றால் அதனையும் கலந்துரையாடல் மூலமாக முன்னெடுக்க தயாராக உள்ளோம்.

சட்ட திருத்தங்களை மாத்திரம் செய்து இந்த பிரச்னைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்க முடியாது. இராஜதந்திர உறவுமுறையும் இதில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.

இந்தியா எமது நட்பு நாடு, அவர்களுடன் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படுகின்றது என்றால் அது குறித்து ஆரோக்கியமாக கலந்துரையாடியே பிரச்னைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

தன்னிச்சையாக எம்மால் இந்த விடயங்களை கையாள முடியாது என்பதையும் சகலரும் கவனத்தில் கொண்டே செயற்படுகின்றோம் - என்றார். (அ)

## மன்னாரில்...

பி.சி.ஆர்.பரிசோதனையின் போது நேற்றுமுன் தினம் புதன்கிழமை மாலை மேலும் 16 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி வரை 85 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 3268 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் தற்போது வரை 36 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## ஜனவரி 31 முதல்...

பூசியை இரண்டு தடவைகள் பெற்றுக் கொண்டவர்கள் அனைவருக்கும் மேலதிகமாக மூன்றாவது தடவையாக கோவிட்-19 தடுப்பூசியானது (பூஸ்டர்) வழங்கப்பட உள்ளது. இத்தடுப்பூசியை இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து ஆகக்குறைந்து மூன்று மாத இடைவெளியின் பின் பெற்றுக்கொள்ளலாம் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

யாழ்ப்பாணம்மாவட்டத்தில்கோவிட்-19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் மூன்றாவது தடுப்பூசி வழங்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.கோவிட்-19 நோயிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள சுகாதார பாதுகாப்பு முறைகளை பின்பற்றுவது மட்டு மல்லாது தடுப்பூசியை காலக்கிரமத்தில் பெற்றுக்கொள்வதும் அவசியமாகும். எனினும் கவலைக்கிடமான வகையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மூன்றா வது மேலதிக தடுப்பூசியை (பூஸ்டர்) பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளமை அவதானிக்கப்பட் டுள்ளது.

தொற்று நோயியலாளர்களின் அறிக்கைகளின்படி கோவிட்-19 வைரஸின் காலத்துடன் ஏற்படும் டெல்டா, ஒமைக்ரோன் போன்ற திரிபுகளை தடுப்பதற்கும் இப்பெருந்தொற்று நிலவும் காலத்தினை குறைப்பதற்கும் கோவிட்-19 தொற்றினால் ஏற்படும் கடுமையான நோய்நிலையை தடுப்பதற்கும் மற்றும் உயிரிழப்புகளை குறைப்பதற்கும் தடுப்பூசிகளை உரிய காலக்கிரமத்தில் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

உலக சுகாதார நிறுவனத்தின் அண்மைய ஆய்வின்படி இரண்டாவது கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக் கொண்ட தினத்திலிருந்து ஆறு மாதங்களின் பின்னர் தடுப்பூசியின் வினைத்திறனானது குறைவடையும் என கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக வயதுவந்தவர்களுக்கு ஏனையோரைவிட இவ்வினைத்திறனானது சற்று அதிகமாகவே குறைவடையும் என்பதும் முக்கியமான விடயமாகும்.

எனவே தற்போது ஏற்பட்டுவரும் கோவிட்-19 திரிபுகளை எதிர்கொள்ள வேண்டுமாயின் இவ் மூன்றாவது தடுப்பூசியை (பூஸ்டர்) பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். மக்கள் தொகையில் குறைந்தது 70 வீதமானோர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டால் மட்டுமே நாட்டில் கோவிட்-19 பெருந்தொற்று ஏற்படாமல் தடுக்கமுடியும். அதன் மூலமே தடுப்பூசி போடுவதற்கு விருப்பமிருந்தும் உடல் நோய் நிலமைகளினால் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்களையும் பாதுகாக்க முடியும்.

அவ்வாறு மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படுவதால் ஏற்படப்போகும் கோவிட் பெருந்தொற்றினால் மிகப்பெரும் எண்ணிக்கையானவர்கள் தொற்றுக்குள்ளாவதுடன் அதிக எண்ணிக்கையான உயிரிழப்புகளையும் எதிர்கொள்ள நேரிடும்.

அண்மைக்காலமாக மீண்டும் நாடுமுழுவதும், மற்றும் மாகாண ரீதியில் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவது அவதானிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி மருத்துவமனைகளில் கோவிட் தொற்றுக்காரணமாக அனுமதிக்கப்படபவர்களின் எண்ணிக்கையும் சிகிச்சையின்போது செயற்கை ஒட்சிசன் தேவைப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துவருவதும் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் பெருந்தொற்று அபாயத்தின் அறிகுறிகளாகும்.

எனவே யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஜனவரி 31ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதிவரை தடுப்பூசி வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நாள்களில் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், அதாவது 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஏற்கனவே சினோபாம் கோவிட்-19 தடுப்பூசியை இரண்டு தடவைகள் பெற்றுக்கொண்டவர்கள் அனைவருக்கும் மேலதிகமாக மூன்றாவது தடவையாக கோவிட்-19 தடுப்பூசியானது (பூஸ்டர்) வழங்கப்பட உள்ளது. இத்தடுப்பூசியினை இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து ஆகக்குறைந்து மூன்று மாத இடைவெளியின் பின் பெற்றுக்கொள்ளலாம் - என்றுள்ளது. (அ)

## இந்திய...

காலை 10 மணிக்கு இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய ஆவணம் தொடர்பில் மற்றுமொரு தமிழ்க் கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவறாகப் பிரசாரம் மேற்கொண்டு வரும் நிலையிலேயே இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நாடே...

மட்டம் தற்போது 60 வீதமாக காணப்படுகிறது. இந்த நீர் மட்டத்தின் அளவு 40 வீதத்திற்கு சென்றதன் பின்னர், மின்சார உற்பத்தியை நிறுத்தும் நிலை ஏற்படும். எரிபொருள்களை கொள்வனவு செய்வதற்கு டொலர் இல்லாமையால், அவசர கொள்வனவின் அடிப்படையில் தனியார் டீசல் நிலையங்களிலிருந்து கூடிய விலைக்கு மின்சார விநியோகத்தை பெற்றுக்கொள்வதற்கும் முடியாத நிலைமை தோன்றியுள்ளதனால் நாளொன்றுக்கு ஒரு மணித்தியாலம் அல்லது இரண்டு மணித்தியாலங்கள் மின் துண்டிப்பு நடவடிக்கையை கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறு செய்யாமல் தான்தோன்றித்தனமாக தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால், எதிர்வரும் 3 அல்லது 4 வாரங்களின் பின்னர் 4 அல்லது 5 மணித்தியாலங்கள் மின் துண்டிப்பை மேற்கொள்ள நேரிடம். இதனால் முழு நாடும் இருளில் மூழ்கும் அபாயம் ஏற்படும்", என்று தெரிவித்துள்ளது. (ஐ)

## பெப். 1 வரை...

இதனைத் தெரிவித்தார்.

மின்வெட்டை மேற் கொள்வதா இல்லையா என்பது குறித்து பெப்ரவரி முதலாம் திகதி பின்னர் தீர்மானிக்கப்படும் என அவர் மேலும் கூறினார். (அ)

## இனிமேல்...

கடந்த பொதுத்தேர்தலில் எமது மக்கள் சக்தி கட்சியின் சார்பில் கொடி சின்னத்தில், கம்பஹா மாவட்டத்தில் ரத்ன தேரர் போட்டியிட்டார். எனினும், அவர் வெற்றிபெறவில்லை. அக்கட்சிக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஊடாக சபைக்கு சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## சொகுசு...

அனர்த்ததால் எமது நாடு பாரிய தொற்று நோயை எதிர்நோக்கியிருக்கும் வேளையில், நாட்டின் காலாவதியான அரசியலை மாற்றியமைத்து எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாட்டுக்கு பெறுமானம் சேர்த்துள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மற்ற அனைத்து அரசியல் கட்சிகளையும் இந்த பயணத்தில் இணைந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மூச்சு மற்றும் 'ஜனசுவய' ஆகிய நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒன்றிணைந்தாக மீகொடை ஆயுள்வேத வைத்தியசாலைக்கு முச்சக்கர வண்டி அன்பளிப்புச் செய்யப்பட்டது. நேற்று காலை இடம்பெற்ற இந்த நிகழ்வில் பங்கேற்றபோதே எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

சுபீட்சத்தின் தொலைநோக்குக்குப் பதிலாக துன்பத்தின் தொலைநோக்கே உருவாக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் பால் மா,எண்ணெய் மற்றும் சிமெந்து போன்றன கொள்வனவு செய்ய வரிசைகள் உருவாகியுள்ளன - என்றும் சொன்னார்.

ஈழநாடு
Eelanadu

# வவுனியா குடிவரவு திணைக்கள அலுவலகம் நேற்று மூடப்பட்டது



வவுனியா, ஜன. 28

கோவிட் தொற்று காரணமாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா பிராந்திய காரியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா பிராந்திய காரியாலயத்தில் கடமையாற்றும் இரு உத்தியோகத்தர்களுக்கு நேற்று கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தின் கடவுச்சீட்டு விநியோகம், கடவுச்சீட்டு விண்ணப்பம் பெறுதல் என அனைத்து செயற்பாடுகளும் மறு அறிவித்தல்வரை நிறுத்தப்பட்டு பிராந்திய காரியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானர்கள் சிகிச்சைக்காக தனிமைப் படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்பில் இருந்த உத்தியோகத்தர்களுக்கும் கோவிட் பரிசோதனை மேற்கொள்ள சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# கொக்கட்டிச்சோலை படுகொலை; நினைவேந்தலுக்கு தடை விதிப்பு!

மட்டக்களப்பு, ஜனவரி 28

கொக்கட்டிச்சோலை படுகொலையின் 34 ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னெடுக்க மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் தடை பிறப்பித்துள்ளது.

1987 ஆம் ஆண்டு இதேநாளில் கொக்கட்டிச்சோலை இறால் பண்ணை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 197 அப்பாவிப் பொதுமக்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

இன்றைய தினம் நினைவேந்தலின் 34ஆவது நினைவேந்தல் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், கொக்கட்டிச் சோலை பொலிஸாரால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றின் கட்டளையை நேற்றுமுன் தினம் பொலிஸார் உரியவர்களிடம் ஒப்படைத்தனர்.

அந்தத் தடை உத்தரவில், நினைவேந்தல் அரசாங்கத்துக்கு எதிரான தூண்டுதல் செயல் என்றும் கொரோனா தொற்று பரவிவரும் சூழ்நிலை உள்ளது. தடை செய்யப்பட்ட இயக்கங்களை மீளுருவாக்கம் செய்யும் செயலாகவும் காணப்படுவதால் 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் சட்டக்கோவையின் பிரிவு 106(1)கீழ் தடை உத்தரவு வழங்க கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி நளின் அசோக குண வர்த்தன மன்றுக்கு அறிக்கை செய்தமை யால் இந்த கட்டளை வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தடை உத்தரவு பாராளுமன்ற உறுப்பினர்களான இ.சாணாக்கியன், கோ.கருணாகரம், முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் சி.புஷ்பலிங்கம், தமிழ்தேசிய மக்கள் முன்னணி பொறுப்பாளர் த.சுரேஷ் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. (ஐ)



# மாவட்ட நீதிமன்ற கட்டடத் தொகுதியை கிளிநொச்சியில் திறந்துவைத்த அலிசப்ரி

கிளிநொச்சி, ஜன. 28

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற கட்டடத் தொகுதியை நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திறந்து வைத்தார்.

இந்த திறப்பு விழா நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீதி அமைச்சின் செயலாளர், வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், கிளிநொச்சி நீதிமன்ற நீதிபதி லெனின்குமார், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், நீதிமன்ற உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள், நீதி அமைச்சின் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

### பொலிஸ் காவலில் இளைஞர் மரணம்!

# உடல்கூற்று, இரசாயன ஆய்வு அறிக்கைகளில் முரண்பாடுகள்

மட்டக்களப்பு, ஜன. 28

பொலிஸ் காவலில் உயிரிழந்தாரெனத் தெரிவிக்கப்படும் மட்டக் களப்பு இருதயபுரத்தை சேர்ந்த விதுஷனின் மரணம் தொடர்பான வழக்கில் உடல்கூற்று பரிசோதனைக்கும் அவரின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட சான்றுப் பொருட்களின் இரசாயன பகுப்பாய்வு பரிசோதனை அறிக்கையிலும் முரண்பாடுகள் உள்ளன என்று சட்டத்தரணி சின்னத்துரை ஜெகன் தெரிவித்தார். இந்த வழக்கு நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ. சி. றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த ஜூன் 3ஆம் திகதி இருதயபுரம் கிழக்குப் பகுதியில் உள்ள வீட்டில் போதைப்பொருள் வைத்திருந்தார் என்றுகூறி நள்ளிரவு வேளை கைதான இளைஞர் பொலிஸ் காவலில் இருந்த நிலையில் உயிரிழந்தார்.

இந்த இளைஞன், ஐஸ் போதைப் பொருள் பக்கெற்றை விழுங்கியதால் அது வயற்றினுள் வெடித்து உயிரிழந்தார் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. அதனை குறித்த இளைஞனின் குடும்பத்தினர் மறுத்திருந்தனர். அத்துடன், குறித்த இளைஞனை பொலிஸார் தாக்கியதாலேயே உயிரிழந்தார் என்றும் குற்றஞ்சாட்டினர்.

இளைஞனின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டு, இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக பேராதனை பல் கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டிருந்தது. இந்த நிலையிலேயே வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அந்த அறிக்கை மன்றுக்கு சமர்ப்பிக்கப் பட்டது.

இந்த ஆய்வின் முடிவின்படி தடை செய்யப்பட்ட போதைப் பொருள் எதுவும் சான்று பொருட்களில் இல்லை என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததாக சட்டத்தரணி தெரிவித்தார்.

ஆனால், குறித்த இளைஞனின் உடல் கூற்றுப்பரிசோதனை அறிக்கையில் அந்த இளைஞன் மெத்தமெயின் என்று சொல்லப்படுகின்ற பொருள்தான் அந்த இளைஞனின் இறப்புக்கு காரணம் என்று சொல்லப்பட்டுள்ளது.

இந்த இரண்டு அறிக்கைகள் இடையேயும் முரண்பாடுகள் உள்ளன என்று நீதிவான் நீதிமன்றில் குறிப்பிடப்பட்டது. இறப்புக்குக் காரணம் மெதமெயின் என்ற போதைப்பொருள் என்று சொல்லப்பட்டாலும் அவர் விழுங்கியதாக சொல்லப்படும் சான்றுப்பொருட்களில் மெத்தமெயினோ தடை செய்யப்பட்ட ஔடதங்களோ பயன்படுத்தப்படவில்லை என்று சொல்கின்றது. இந்த இரண்டு காரணங்களும் முரண்படுவது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதேபோன்று, பொலிஸார் இரத்த மாதிரிகளை பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதாகவும் அந்த அறிக்கை கிடைத்ததும் விசாரணைகள் முன்னெடுப்பதற்காக எதிர்வரும் பெப்ரவரி 23ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)



# 1 லட்சம் கிலோ பூசணி, தர்பூசணி மன்னார் மாவட்டத்தில் அறுவடை

மன்னார், ஜன. 28

மன்னார்- முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொண்டைச்சி பகுதியில் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினால் இயற்கையான முறையில் பயிரிடப்பட்ட தர்பூசணி பூசணிக்காய்,மற்றும் கெக்கரிக்காய் பயிர் செய்கையின் அறுவடை நிகழ்வு நேற்று மதியம் கொண்டச்சி கஜூ பண்ணையில் இடம்பெற்றது.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி சாரங்க ரத்னாயக்கா மற்றும் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபன அதிகாரிகள் இணைந்து குறிப்பிட்ட அறுவடை செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தனர்.

கடந்த நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட பயிற்செய்கையானது முற்றுமுழுதாக இயற்கையான முறையில் மேற்கொள்ளப்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் நேற்று அறுவடை செய்யப்பட்டது.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 250 ஏக்கர் நிலத்தில் மேற்படி பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டதுடன் குறித்த அறுவடையில் ஒரு லட்சம் கிலோ மதிப்பிடக்கூடிய பூசணிக்காய்கள், இருபத்தையாயிரம் கிலோ அளவுடைய தற்பூசணிகளும் முப்பதாயிரம் கிலோ கெக்கரிக்காயும் அறுவடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**

12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பொன் மகள் வந்தாள்,புரியாத புதிர் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10



**இரவு**

7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - பால்மாவும் பசுப்பாலும்



10.00 மணி : நேருக்கு நேர்

---

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

---

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

---

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : ஈழத்து சித்தர்கள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

---

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

---

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்